175319

அண்ணாதுரை


DEPUTY SECRE

BAL BROS

V2,187 N09
N49
125319


...பதிப்பகம், காஞ்சிபுரம்.

See Compl. file Rc. 23/49

# மூலபலம் முறிகிறது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUN 1949
MADRAS

சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,
எழுதியது.

காஞ்சிபுரம்
"திராவிட நாடு" அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு,

★

பரிமளம் பதிப்பகத்தாரால்
வெளியிடப்பட்டது.

விலை எட்டணா : : மே, 1949

# எங்கள் நோக்கம்

ஜாதி முறை—வஞ்சகரின் சூழ்ச்சித் திறனால் அமைந்த கோட்டை! ஜாதியினால் உயர்ந்தவர்கள் என்று தங்களைச் சூட்டிக் கொண்டு, அப்படிச் சூட்டிக் கொள்வதால் உயர்வு, வசதி, பலன் ஆகிய நலன்களைப் பெற்றுக்கொண்டு, தங்களுடைய சுயநலச் சுரண்டலுக்கு, பாடுபடாப் பிழைப்பிற்கு, சுகபோக வாழ்விற்கு ஏகபோக மிராசுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகும் என்று கருதி, ஒரு சிறு கூட்டத்தார், அந்த கோட்டைக்குள் குடியேறி, வாழ்ந்து வருகின்றனர். அந்தக் கோட்டையைக், கால வெள்ளம் இப்பொழுது மோதுகிறது. அவ்வெள்ளத்தில் மிதந்து வரும் கருத்துக்கள், கோட்டையின் சுவர்களைத் தகர்த்தெறிகின்றன. கோட்டைக்குள்ளிருப்போர், சாகசம், தந்திரம், அகம்பாவம், ஆணவம் ஆகியவை கொண்டு எதிர்த்துப் பார்க்கின்றனர்; பலனில்லை! கோட்டை சரிகிறது, வைதிகத்தின் மூலபலம் முறிகிறது! அப்படி மூலபலம் முறியும் போக்கை, ஆசிரியர், இந்நாலில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் காட்டுகிறார். இந்நூலை அச்சிட்டுப் பரப்பும் பணியை ஏற்றுக்கொள்ள விரும்பிய எம் நோக்கத்திற்கு, ஆதரவு தந்து, அனுமதி அளித்த ஆசிரியருக்கு எங்கள் உள்ளம் நிறைந்த நன்றி என்றும் உரித்தாகுக!

1—5—49 பரிமளம்பதிப்பகத்தார்.
காஞ்சிபுரம்

125319

# மூலபலம் முறிகிறது!

10 JUN 1949
MADRAS

ஜாதி எப்படியோ, வந்து புகுந்துவிட்டது, தமிழகத்தில், தமிழ் மொழிக்கே புறம்பான சொல்—தமிழிலே, சொல்லே இல்லை —ஜாதி என்ற சொல் வடமொழி,—வெளியாரின் திட்டம்—தமிழரின் வாழ்வை, பலப்பல நூற்றாண்டுகளாகப் பாழ்படுத்திய திட்டம்.

ஜாதி—ஒழியவேண்டுமா, வேண்டாமா? என்பது, இன்றுள்ள கேள்வி.

ஜாதிபற்றிக் கவலைப்படுவானேன் — ஏன், ஜாதி, ஜாதி, என்று அழுது தொலைக்கிறீர் — என்று பேசுவது, கேள்விக்குப் பதில் அல்ல — சாகசம்!

பாழாய்ப்போன, ஜாதிப் பேச்சு ஆரம்பமாகிவிட்டதா! எந்த ஜாதியாக இருந்தால், உனக்கு என்னய்யா? — பதில் அல்ல – தந்திரம்.

அவாளவாள் ஜாதி, அவாளவாளோடே — இதுவும் பதில் அல்ல— அகம்பாவம்.

அவனவனுக்கு அவனவன் ஜாதிதான் உசத்தி — இதுவும், ஆணவம் — சற்று ஆட்டம் கொடுத்த நிலையில் உள்ள ஆணவம்.

எந்த ஜாதியாக இருந்தாலும், கவலை என்ன -- பேதம் என்ன -- எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பதைப்பற்றி ஏன் வீணான தர்க்கம், அதனால் பயனற்ற விபரீதமான விளைவுகள்? ---

இதுவும், ஜாதி ஒழிய வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்விக்கு, தகுந்த பதில் அல்ல — தந்திரம்.

நாடு — இன்று, இக்கேள்விக்கு தகுந்த பதிலையும், அந்தப் பதிலை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான, பலனுள்ள திட்டத்தையும், எதிர்பார்த்து நிற்கிறது.

இந்தக் கலைமுறையில், பிரச்னையைத் தீர்த்தாக வேண்டும், நாடு, நாசமாகாதிருக்க வேண்டுமானால், அதுதான் வழி, என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

தந்திரக்காரர்கள், கேள்விக்கு நேரடியான பதில் தராமல், தப்பித்துக் கொள்வதுடன், மக்களின் கருத்தைக் குழப்பும் காரியத்தையும் செய்கிறார்கள்.

உள்ள உரம் அற்றவர்கள், செயலாற்றும் திறனற்றுள்ளனர். அச்சம் அவர்களுக்கு.

அரசாள்வோர், 'ஊஞ்சலாடுகின்றனர்' அச்சத்துக்கும் ஆசைக்கும் இடையே. மக்கள் திகைக்கிறார்கள், மாவீரர்கள், மாபெருந் தலைவர்கள் என்போர், இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் திணறுவது கண்டு. ஜாதியோ சிரிக்கிறது!

வெற்றிச் சிரிப்பல்ல — வேதனைச் சிரிப்புமல்ல — கேலிச் சிரிப்பு — ஆனால் அந்தக் கேலியுடன், சிறிதளவு கிலியும் கலந்திருக்கிறது.

நாடு, சீர்பட வேண்டுமானால், நாம், உலக மன்றத்தினரால், கேலி செய்யப்படாதிருக்க வேண்டுமானால், விடுதலையின் மூலம், நாம், உருவான நற்பலனைக் காணவேண்டுமானால், நமது நாட்களிலே, ஜாதிப் பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும்.

ஜாதிகள் இருந்தாக வேண்டும் — என்று எண்ணுபவர்கள், தங்கள் திட்டத்தைத் தந்திரத்தினால் மறைத்துவைக்க முயலுகிறார்கள்— புயலின்போது பதுங்கிக் கொண்டால், அமைதியான சமயத்திலே, வெளியே கிளம்பலாம், வெற்றிக் கொடி காட்டலாம், என்று எண்ணிக் கொண்டுள்ளனர். எந்த வகையிலேயோ, நிலையிலேயோ, 'ஜாதி முறை' இருந்துவந்தால், பிறகு, 'பொன்னான நேரம்' பார்த்து, ஜாதி முறையைத் தமது விருப்பத்திற் கேற்றவண்ணம், புதுப்பித்துக் கொள்ளலாம், என்று எண்ணுகிறார்கள். கலனாகி விட்டாலும், கள்ளி காளான் முளைத்துக் கிடந்தாலும், பாம்புப் புற்று நிரம்பியிருந்தாலும், பாழுங் கிணறு இருந்தாலும், பழைய வீடு பறிபோகாமலிருந்தால், 'நல்ல காலம்' வந்ததும் வீட்டை,



தக்கவிதமாகத் திருத்திக் கொள்ளலாம், என்று எண்ணும், 'வாழ்ந்து கெட்டவன்' போலவே, சிலர் கருதுகின்றனர்— ஆச்சாரங்கள் குறைந்துவிட்டாலும் குலதர்மம் குன்றிக் கிடந்தாலும், 'காலம் வரும்போது' திருத்திக் கொள்ளலாம், ஜாதிமுறை, சீர்கெட்ட, பாழ்பட்ட, நிலையிலாவது, உயிருடன் இருந்தால் போதும் — என்று எண்ணுகின்றனர்.

இவர்களின் கண் முன்பாகவே, காலம், அறிவுச் சம்மட்டி கொண்டு அடித்து நொருக்குகிறது, ஜாதி ஆச்சாரத்தை — அதனைத் தடுக்கத் திறனின்றித்தான் உள்ளனர் — கதறுவதைக் கூடக் குறைத்துக் கொண்டனர் — ஆனால் மனதிற்குள்ளே, 'ஆசை' மட்டும் கூத்தாடியபடிதான் இருக்கிறது, சம்மட்டி அடியினால், நொருங்கியது போக, 'மிச்சமீதி' இருந்தால், போதும், அதைக் காப்பாற்றிக் கொண்டால், பிறகு, 'காலம் வரும்' பழையபடி ஜாதியை உருவாக்கிவிடலாம், என்று கருதுகின்றனர்.

காலத்தின் தாக்குதலை, கயவரின் தாக்குதல் என்றும், பகுத்தறிவின் வேகத்தை, பாப காரியம் என்றும் கருதிடும் பக்குவமற்றவர்கள், இவர்கள் — யாரோ, எதற்காகவோ, வேண்டுமென்றே, நாட்டிலே, ஆச்சாரங்களையும் தர்மங்களையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்குவது போலவும், அத்தகைய காரியம் செய்வோர் பாபிகள், நீசர்கள், நிரீஸ்வரவாதிகள், என்றும், அவர்களை அழித்தொழித்து, மீண்டும் 'ஆச்சார அனுஷ்டானாதிகளை! நிலைநிறுத்தும், 'சத்புருஷர்கள்' அவதரிக்கப் போகிறார்கள் என்றும், அதுவரையிலே, கஷ்டப்பட்டு, சிதைந்திருக்கும் நிலையிலேயாவது ஜாதிமுறையைக் காப்பாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் எண்ணுகிறார்கள்.

இவர்கள், எவ்வழி உலகம் செல்கிறது, என்பதறியாத ஏமாளிகள். சிலர், ஏமாளிகள் அல்ல—இமயத்துக்கு அப்பால் உலகம் கிடையாது, அங்கு கைலாயம் இருக்கிறது என்றும், வானவீதியிலே நாரதர் உலவுகிறார், பல லோகங்கள் உள்ளன, பாற்கடலிலே பரமன் பள்ளிகொண்டிருக்கிறார், என்ற பழங்கதைகள், பயனற்றன என்பதை அவர்கள் அறிவர்—அந்த நம்பிக்கைகள் நடமாடிய காலத்திலே இருந்துவந்த ஜாதி குல முறை, இன்று நிலைத்திருக்க

முடியாது, பொருளுள்ளதல்ல, பயனுள்ளதல்ல, எனவே அந்த முறை மடிந்தே தீரும், என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்கள், அறிஞர் மன்றமேறி, அட்லாண்டிக் சாசனம் பற்றிப் பேசுபவர்கள்—அரி தாயில் புரியும் அரிபரந்தாமனைப் பற்றி அரிகதா காலட்சேபம் புரிபவர்களல்ல.

ஆப்பிரிக்காவிலே நடைபெறும் அநீதி பற்றியும், அமெரிக்காவில் கொழிக்கும் செல்வம் பற்றியும் பேசுபவர்கள்-அந்தரத்திலே இருக்கும் இந்திரலோக அற்புதம் பற்றியோ, பிரம்மலோகம் பற்றியோ, பாடுபவர்கள் அல்ல. பார்லிமெண்டுகளிலே உள்ளவர்கள்—பஜனைக்கூடங்களில் அல்ல.

ஜாதி முறை—சக்தற்ற, பொருளற்ற நிலையிலே இருப்பதைத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற நோக்கம்கூடக் கொள்ளாதவர்கள்-ஜாதி முறை சீர்கெட்டுவிட்டது பற்றி வருத்தம் கூட அடையாதவர்கள், எனினும், அந்த முறையின் அடிப்படை மட்டும், இருப்பதும், சுயநலச் சுரண்டலுக்கு, பாடுபடாமல் பிழைப்பதற்கு, பயன்படுகிறது என்பதறிந்து, அதற்காகவே, அந்த ஜாதி முறையைக் காப்பாற்ற முனைகிறவர்கள். இவர்கள் ஏமாளிகளைப் போல, ஜாதி முறை சாமான்யமா, அயன் வகுத்ததல்லவா, என்று கூற மாட்டார்கள் - ஜாதிமுறையின் காரணமாக, தமக்கும் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் கிடைத்துள்ள, உயர்வு, வசதி, பலன், பறி போகாதபடி பாதுகாத்துக் கொள்வதற்கு வேண்டிய அளவு, ஜாதியை உபயோகிப்பர்.

நாட்டிலே, பேதமும் பிளவும், மாச்சரியமும் மனத் தாங்கலும், வளருவது, இவர்களின் போக்கினால்தான்.

இவர்கள்தான், ஜாதிப் பிரச்னையை மூடி வைப்பவர்கள்—அதனைப் பிறர் கிளறுவது கண்டு கோபிக்கிறவர்கள், அதேபோது, அதன்பேரிலேயே தங்கள் சுயநல வாழ்வைக் கட்டிக்கொண்டு நிற்பவர்கள்.

தோட்டத்துக் கதவைத் தாளிட மறந்து விடும், பணியாள், முட்டாள்—கெடுமதியாளனல்ல.



தோட்டத்துக் கதவைத் தாளிடாமலே, வீட்டுக்குடையவனிடம், தாளிட்டு விட்டேன் என்று கூறி, நம்பும்படி செய்யும் பணியாள், முட்டாளல்ல, நள்ளிரவிலே உள்ளே புகத் திட்டமிடும் கள்ளனுக்குக் கூட்டாளி.

நோயின் கூறு தெரியாமல், மருந்து தேடாமலிருக்கிறான், மந்தமதியினன். நோய் இதுவென அறிந்திருந்தும், அந்த நோயின் பிடியிலே சிக்கியிருப்பவனின் செல்வம், தனக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக, நோய் அல்ல —அப்படி நோய் என்றாலும், பயப்படவேண்டியவிதமான, கவலைப்படவேண்டிய விதமான நோயல்ல, என்று, நோயாளியை நம்பும்படி செய்பவன் மதிகுறைந்தவனல்ல, சதிநிரம்பிய உள்ளத்தவன்.

ஜாதியினால் விளையும் கேடுகளை உணர முடியாமலும், காலவேகத்தின் முன்பும், அறிவுக்கதிரின் முன்பும் அந்த முறை நிற்கக்கூசுகிறது என்பதை அறிய முடியாமலும், அந்த முறையின் மீது பற்றுக் கொண்டுள்ள பாமரனை விட, ஜாதியினால் விளையும் கேடுகளை நன்கு அறிந்திருந்தும், அதன் மூலம், 'சுகவாழ்வு' தமக்குக் கிடைக்கிறது என்ற காரணத்துக்காக, அந்த முறையைச்சீர்கெட்ட நிலையிலேயும், செல்லப்பிள்ளையாகக் கொள்ளும், 'படித்தவர்கள்' மிகமிகக் கேடு செய்பவர்கள், நாட்டுக்கு.

அவர்கள்தான், அலட்சியமாகப் பேசுபவர், "இதென்னய்யா, ஜாதி, ஜாதி, என்று, எதற்கெடுத்தாலும் பேசுகிறீர்கள்" என்று.

ஜாதி சமய பேதங்களைக் கடந்தவர் போலப் பேசி, அதே போது, ஜாதி முறை தரும் பலனை அனுபவித்து வருகிறவர்கள், இந்த அறிவாளிகள் கூட்டம்.

கம்பங்கூழுக்கு மிஞ்சிய அருமையான உணவு வேறு உண்டா! நம்ம கந்தன் காலையிலே அதைத்தான் சாப்பிடுகிறான் என்று, "சிரகச் சம்பா சாதத்தில் தக்காளி சாம்பாரைப் போட்டுக் கொண்டு, கருவூர் நெய்யை நாலுகரண்டி கலந்து" சாப்பிட்டான பிறகு பேசும், கிராமீய வாழ்க்கைப் பிரசங்கி போன்றவர்கள்!

"ஏன்டா ஆறணாவுக்கா இந்த அழுகை! குடியா முழுகிவிடும், இந்த ஆறணாவைக் கொடுத்து விட்டால்—இல்லையானால், இந்த ஆறணாவை எடுத்துக்கொண்டு நான்தான் என்ன, கோபுரம் கட்டிவிட முடியுமா! பைத்யக்காரா! இந்த ஆறணாவுக்காக இப்படி நாலு நாழியாக மல்லுக்கு நிற்கிறாயே!" என்று வட்டி செலுத்து பவனிடம், வாதாடி, 'அறுபத்து மூனு ரூபா ஆறணா'வைத் தீர்த்து வாங்கும், 'தர்மப்பிரபுக்கள்' போன்றவர்கள்.

இதே முறையிலே பேசுகிறார்கள், "அடடா! பொழுது விடிந்தால் பொழுது போனால், ஜாதிப் பேச்சுத்தானா! எதற்கு எடுத்தாலும், ஜாதி தானா குறுக்கிட வேண்டும்? என்னடா இது மடைத்தனம். அவன் என்ன ஜாதி? இவன் என்ன ஜாதி? அய்யரா, அல்லாதவரா, என்கிற பேதபுத்திதானா எதற்கு எடுத்தாலும்? ஏதோ ஜாதி, ஜாதி, என்று ஒரு முறை இருக்கிறது. இருந்து தொலைக்கட்டும். அதற்காக, அதைக் கொண்டுவந்து, எதிலே பார்த்தாலும் நுழைப்பதா? அக்ரமமாக இருக்கிறதே! பள்ளிக்கூடத்திலே நுழைந்தால், நீ என்ன ஜாதி?—என்ற கேள்வி. ஜாதியைப் பார்த்துத்தான், சேர்த்துக்கொள்வது என்ற ஏற்பாடு — அக்ரமமான திட்டம். உத்யோகத்துக்குப் போனாலோ, நீ என்ன ஜாதி என்ற கேள்வி, இன்னின்ன ஜாதியாருக்கு இவ்வளவு உத்யோகம் என்று பங்கு—இப்படியா, இந்த ஜாதிச் சனியன் இங்கெல்லாம் நுழைந்து, பாழ்செய்வது, ஜாதி அவனவன் 'மனசோடு' "வீட்டோடு" இருக்கவேண்டியதுதானே! பள்ளிக்கூட விஷயத்திலும், உத்யோக விஷயத்திலும், ஏன், இந்த ஜாதிமுறை! இது என்ன பைத்யக்காரத்தனம்?" என்று பேசுகிறார்கள், "சமரசஞான மகான்கள்" போர்வையிலே உலவும், சுயநலமிகள்.

ஜாதிமுறை பற்றிய கவலையைக் கடந்தவர்களுக்கு, எந்த ஜாதியாருக்குக் கல்விநிலையத்திலே எத்தகைய நிலைமை இருந்தால் தான் என்ன! கட்டியிருக்கும் காவி துறவறத்தின் அறிகுறியானால், காந்தா, கருப்பாக இருக்கிறாள், கமலா, பொன்னிறம், சாந்தா, நல்லசிவப்பு, என்ற 'களிப்பு' ஏன்பிறக்கவேண்டும்? ஏன், பிராமண வகுப்புப் பிள்ளைகளைக் கணக்கெடுத்து, குறைந்த அளவு சேர்த்துக் கொள்கிறீர்கள்? வகுப்புவாரியாக ஏன் கவனிக்கிறீர்கள்?—என்ற



கேள்வி, இவர்கள் மனதிலே, தோன்றலாமா? இவர்களோ, சமரச நோக்கினர்—அதுமட்டுமல்ல, பதவி பற்றிய பற்றே அற்றவர்கள்—வகுப்புவாதமற்றவர்கள்—இப்படிப்பட்டவர்களுக்கு, ஏன், இந்தக் கவலை!

ஆனால்; கவலைப்படும் நிலைமட்டுமல்ல, காட்டுக்கூச்சலிடும் நிலைக்கு, இருக்கிறது இவர்களின், போக்கு! சமயம்கிடைக்கும் போதெல்லாம், இதே பேச்சு.

ஆடவராயினும், அம்மையாராயினும், தேசியமாயினும் சர்வதேசியமாயினும், கதராயினும் காவியாயினும், ஆங்கிலத்தில் பேசினும் தேவபாஷையில் பேசினும், ஆஸ்ரமத்திலே இருப்பினும் அரசியல் மன்றம் செல்லினும், எங்கும், எப்போதும், இதே கவலை, இதே பேச்சு!

கட்சிக்கட்டுப்பாடு, காற்றிலே பறக்கிறது, இந்தப் பிரச்னையின் போது!!

அமைச்சர்கள், படாதபாடு படுகிறார்கள், இவர்களிடம் தாக்குண்டு!

சென்னையிலே கேள்விப் பாணம்; டில்லியிலே கேள்விப் பாணம்!!

சிற்றம்—சாபம்—தாக்குதல்—மிரட்டல் —சகலமுறைகளும், கையாளப்படுகின்றன.

பள்ளிகளிலும், உத்யோக மண்டலங்களிலும், ஜாதிவாரியாகச் சேர்ப்பது என்ற திட்டம் கூடாது—அது வகுப்புவாதம், என்கிறார்கள்.

அந்தத் திட்டத்தை எடுத்து விட்டால், குறிப்பிட்ட ஒரு வகுப்பார் மட்டுமே, சகல துறைகளிலும் 'ஏகபோக ஆட்சி' செய்வார்களே, என்று பதில் கூறினால், "ஏன் நீ, அதுபற்றிப் பேசுகிறாய்! பேசுவது வகுப்புவாதம்" என்று மிரட்டுகிறார்கள்.

வகுப்பு வர்தம்—வகுப்பு நீதி—எனும் இரு சொற்றொடர்களுக்கும், உள்ள பேதத்தை, உணர்ந்துகொள்ளும் பக்குவமற்ற நிலையிலேபாமரர் இருக்கின்றனர், அவர்களே நாட்டிலே பெரும்பான்மையினர் என்ற தைரியம் அவர்களுக்கு.

வகுப்புவாதிகள்! பதவிப் பித்தர்கள்!!—என்று பழிசுமத்தி, பாமரரை மயக்கிவிட, பத்திரிகைகள் தம்மிடம் ஏராளமாக உள்ளன, என்ற தைரியம் வேறு.

தேசியம்—காங்கிரஸ்—என்ற பெயரால் ஒரு ஆட்சியை அமைத்துவிட்டால், அதன் 'திரைமறைவிலே இருந்துகொண்டு, சுரண்டிப்பிழைக்கலாம் என்ற தைரியமும் உண்டு.

ஆனால், இந்த மூன்றும், முறிந்துகொண்டு வருகின்றன!
பாமரர்—தெளிவுபெற்றுக்கொண்டு வருகின்றனர்.

அவர்கள், குலதர்மம்—ஜாதி ஆச்சாரம் என்று பேசுபவர்கள், தத்தமது குலதர்மத்தை இழந்து விட்டும் நாட்டிலே பெரியவர்களாக மதிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறார்கள். தமது திருமகளை, காந்தியாரின் திருமகனுக்கு த்திருமணம் செய்து கொடுத்தவர்தான், இன்று கவர்னர் ஜெனரலாக இருப்பதைப் பாமரரும் அறிவர்! ஜாதிமுறை-குலதர்மம்—ஆச்சார அனுஷ்டானம்—சாஸ்திரம் சம்பிரதாயம் எனும், எதுவும், இந்தத் திருமணத்தைத் தடுக்கவுமில்லை—அவருடைய நிலையைக் கெடுக்கவுமில்லை—அவருடைய குலத்தாரே அவரை, இராமானுஜர் போன்றவர், மகாஞானி, வேதாந்தி என்று புகழ்கிறார்களேயன்றி, ஜாதி ஆச்சாரத்தைக் கெடுத்தவர், குலதர்மத்தை நாசமாக்கியவர் என்று கண்டிக்கவில்லை, இகழவில்லை, என்பதையும் பாமரர்பார்த்துவிட்டனர். இந்நிலையில் பாமரர், ஜாதி ஆச்சாரத்தைப் பற்றிப் பிரமாதப்படுத்திப் பேசும் சிலருடைய வார்த்தையை மதிக்கவா முடியும்—அந்தப் பேச்சிலே, நாணயமிருப்பதாகக் கருதவா முடியும்!

பாமரர்களின் மனமயக்கம், வேக வேகமாக நீக்கப்பட்டு வருகிறது—நாட்டு நடவடிக்கைகள்—நாட்டு மக்களால் நன்கு மதிக்கப்பட்ட, பெரியவர்களின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும், ஜாதிமுறை பற்றி அவர்களுக்கு இருந்துவந்த மயக்கத்தை அறவே ஒழித்துக் கொண்டு வருகிறது.

தேவதாஸ்—லட்சுமி
அம்பேத்கார்—லட்சுமி
சுப்பராயன்—ராதாபாய்



இப்படி, 'மங்களகரமான' செய்திகள், தமது செவிக்கு விழும் நாட்களிலே வாழும் மக்களிடம் சென்று, ஜாதி ஆச்சாரத்தின் மேன்மையைக் கூறினால், அதனை மதிப்பார்களா!

எனவே, மூன்று பலத்திலே முக்கியமான பலமாக அவர்கள், கருதிவந்த பாமரனின் மயக்கம், தெளிந்து வருகிறது. பத்திரிகைகள் மூலமும், பலம் அதிகம் கிடைப்பதில்லை-பகை வேண்டுமானால் மூள்கிறது.

இவைகளை விட அவர்களுக்கு அதிகமான ஏமாற்றம், அதிர்ச்சி 'காங்கிரஸ்' என்ற பெயர் சூட்டப்பட்டுவிட்டால் போதும், அந்த ஆட்சியாளர்கள், வகுப்புவாரி முறையை ஆதரிக்க முடியாதபடி ஆக்கப்பட்டுவிடுவார்கள், என்று எண்ணினது, வீணானதுதான்; நடப்பது, காங்கிரசாட்சி-சந்தேகமில்லை-ஆனால், வகுப்புவாரி முறையோ, ரத்து ஆகவில்லை-ரத்துசெய்யும் விருப்பம் இல்லை-முடியாது என்பதைத் தைரியமாகக், கூறுகிறார்கள். மூலபலம் என்று அவர்கள் கருதிய மூன்றும் முறிவதுகண்டு, அவர்கள் மனதிலே, கோபத் தீ மூண்டுவிட்டது-எனவே இருவேறு புதுக் கருவிகளை வீசுகிறார்கள். டில்லியைக் காட்டுகிறார்கள்-ஈரோட்டைக் காட்டுகிறார்கள்.

நேரு சொன்னது என்ன? படேல் சொன்னது என்ன? டில்லி சொல்வதென்ன?—என்று மிரட்டுகிறார்கள்.

ஈரோடு, என்ன செய்கிறது தெரியுமா! அங்கிருந்து கிளம்பும் ஆபத்தை அறியீரா? அதற்கு உடந்தையாகவா இருக்கிறீர்கள்? என்று கேட்டு, கிலி மூட்டுகிறார்கள்.

ஜாதி முறையினால் விளைந்த பலகேடுகளிலே ஒன்று, படிப்பும், உத்யோகமும், ஒரு குலத்திடமே சென்று, அவர்களை மேலும் உயர்த்தி, செல்வாக்குப் பெறச்செய்து, நாட்டில் மற்றவர்களைப் பின்னணி தள்ளி, உழைப்பாளி வர்க்கமாக்கிய கொடுமை.

இதனை உணர்ந்து, இது அநீதி என்பதை அறிந்து, ஒரு நாட்டு மக்களில், ஒரு குலம் மட்டும், மற்றவர்கள் அண்ணாந்து பார்த்து ஆயாசமடையும் அளவுக்கும், கண்டு அச்சப்படும் வித

மாகவும், வளர்ந்திருப்பது ஆபத்தான நிலைமை, நாட்டின் மொத்தத் தரம், கெட்டுவிடும், என்பதை உரைத்து, இந்த அக்ரமத்தை நீக்க முயற்சி எடுக்கப்பட்டது.

இந்த முயற்சி, இரு கூறுகள் கொண்டது--இரு வேறு இயக்கங்களாக வளர்ந்தன.

ஒன்று, ஒருகுலம், ஏன் உயர்ந்ததாகத் திகழவேண்டும், மற்றவர்கள் ஏன் மட்டமாக மதிப்பிடப்படவேண்டும், உயர்ந்த குலம் தாழ்ந்தகுலம் என்று மக்களைப் பேதப்படுத்தியது எப்போது, எதற்காக, ஏன் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்? இந்த ஏற்பாடு, எதன் மீது கட்டப்பட்டிருக்கிறது, என்ற அறிவாராய்ச்சித் துறையிலே பணிபுரிந்து, ஜாதிமுறையைத் தாக்கும் புரட்சி இயக்கமாக உருவெடுத்தது--அதுவே சுயமரியாதை இயக்கம்.

மற்றொன்று, ஒரு குலத்துக்குமட்டுமே படிப்பு வசதி, உத்யோகம் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்து வருவது கூடாது, அது அக்ரமம், ஆகவே, மற்றவகுப்பார்களும், முன்னேறி, முதலிடம் பெற்றுவிட்ட வகுப்புடன் சமமாவதற்காகப் படிப்பு, உத்யோகம், ஆகிய வாய்ப்புகளை, இனி, வகுப்பு எண்ணிக்கைக்குத் தக்கபடி, 'பங்கீடு' செய்வதுஎன்ற முறை வகுத்து, வகுப்பு நீதியை நிலைநாட்டிய, நீதிக்கட்சியாகும்.

நீதிக்கட்சியை, உத்யோக வேட்டைக்கட்சி, வகுப்புவாதக் கட்சி, என்று கூறித் தாக்கினார்கள்.

சுயமரியாதைக் கட்சியை, நாத்திகக் கட்சி, என்று நிந்தித்துத் தாக்கினார்கள்.

இந்தத் தாக்குதல், இரு இயக்கங்களையும், ஒன்றாக்கி, ஒருருக் கொள்ளச் செய்தது.

அந்த ஒருருவான பிறகு, 'பதவி பட்டம்' என்பதை விட்டொழித்து, சமுதாய நீதியையே குறிக்கோளாகக்கொண்ட, புதியதோர் சக்தியாக மாறி, புதுப்பெயரும் பெற்றது—திராவிடர்கழகம், என்று திகழ்கிறது.



இப்போது, இருவகைத் தாக்குதலையும், கழகத்தின் மீது நடத்துகிறார்கள். கழகம் கனதனவான்களின்கூடாரமாக இல்லாததால், கல்லடி சொல்லடி, ஆட்சியாளர் தரும் அடக்குமுறை, எல்லாவற்றையும் தாங்கிக்கொள்ளும் வலிவு பெற்று, வளர்ந்தவண்ணம் இருக்கிறது.

இந்த வளர்ச்சியே, வேதனையையும் வாட்டத்தையும், மூட்டிவிடக்கூடியது, குலத்தின் பேரால் ஆதிக்கம் செலுத்துபவருக்கு.

இது போதாது என்று, ஆட்சிப்பீடத்திலுள்ள வர்களும் "வகுப்புவாரி' முறையைக் கைவிட முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டால், கடுங்கோபம் வராதா, அந்தக் கண்ணியர்களுக்கு. கண்களிலே கனல்! இடையிடையே புனல்! கண்டனம்! சாபம்!—கிளம்புகிறது—அமைச்சர்களை நோக்கி.

அமைச்சர்கள், கழகத்தின்மீது தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கும் நிலையிலேயே, அதன் கொள்கைகள் என்ன, என்று கண்டறியும், வாய்ப்புப் பெற்றார்கள். அவர்களால், புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு, கழகக் கொள்கையை ஆதரிக்க முற்படுகிறார்கள் — கழகம் கூறுகிறது என்பதற்காக அல்ல — அறிவுலகம் அதனையே கூறுகிறதே, என்பதால்.

வகுப்பு நீதி நிலைக்க வேண்டுமானால், வகுப்புவாரி முறை இருந்தாகவேண்டும், என்று கூறும் அளவுக்கு, அமைச்சர்கள் வந்துள்ளனர்.

சமூக நீதி நிலைக்க வேண்டுமானால் ஜாதிகள் ஒழியவேண்டும், மதம் நிலைக்க வேண்டுமானால், மாசுகள் நீக்கப்பட வேண்டும், என்ற அளவுக்கும் முன் வந்துள்ளனர்.

வகுப்பு நீதியை, அமைச்சர்கள் ஆதரிக்கும்போது, அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியினராகவும் — சமூக நீதியை ஆதரிக்கும்போது அமைச்சர்கள் சுயமரியாதைக்காரர்கள் போலவும் தெரிகின்றனர் — இது கண்டே, திடுக்கிட்டுப் போயுள்ளனர், ஏகபோக மிராசு பாத்யதையினர்!

"என் ஜாதிக்காக நான் பேசுகிறேன்!" என்று பேசினார், திருமதி

ருக்குமணி லட்சுமிபதி அம்மையார் — முன்னாள் அமைச்சர், சென்னை சட்டசபையில்......

முஸ்லீம் போல, கிருஸ்தவர் போல, அம்மையார், ஜாதியின் பேரால் ஓட்டுப்பெற்று வந்தவர்களல்ல, ஜாதிகளைக் கடந்த தேசியத்தின் பேரால் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்! அம்மையாருக்கு தேசியம் பூசப்பட்டும், 'ஜாதீயம்' கிளம்பாமலில்லை — தன் ஜாதிக்காகப் பேசலானார்கள்! — பெண் குலத்துக்காகவா என்று கேட்கத் தோன்றும், பெரு நோக்குடையவர்களுக்கு, — அல்ல, அல்ல, அம்மையார் பேசினது, அயனால் முதல் ஜாதியாகப் பிறப்பிக்கப்பட்ட "பிராமண ஜாதியைப் பற்றி"த்தான்!

'என் ஜாதிக்காகப் பேசுகிறேன்' என்று கூறிய வகுப்புவாதி, சென்னை மந்திரி சபையின் வகுப்புவாதப் போக்கை, காரசாரமாகக் கண்டித்தார். மன்னிக்கக் கோருகிறோம் — காரசாரம் என்று கூறியதற்காக — காரம் சாரம் இரண்டும் வறண்டு போனநிலை இப்போது, அம்மையார் பேசின பிரச்னைக்கு. பழைய பல்லவியேதான்! ஏன், "பிராமண மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை? ஏன், பள்ளிக் கூடங்களிலே வகுப்புவாரியாக மாணவர்களைச் சேர்க்கிறீர்கள்? ஏன் இந்த வகுப்புவாதம்? திறமை என்ன கதியாவது?" என்று பேசினார்கள்.

இடையே கழகத்தையும் ஏசினார்கள்—சிறிது சோகரசமும் சொட்டிற்று அம்மையின் கருத்திலே. அவருடைய ஜாதி, இழித்தும் பழித்தும் பேசப்படுகிறதாம்! வெளியே தலைநீட்ட முடிவதில்லையாம்! கண்டபடி பேசுகிறார்களாம்! இதற்கெல்லாம் "கடவுள்தான் கூலி கொடுக்கவேண்டுமாம்!" பெண்களிடம் கூட இந்த விஷம் பரவி விட்டதாம். எல்லாம் கருப்புச்சட்டைக்காரர்கள் செய்யும் விஷமமாம்! — அம்மையார், ஒரு மூச்சு அழுது தீர்த்துவிட்டார்கள். அமைச்சர்களைச் சும்மாவிடவில்லை —டில்லித் தலைவர்களின் தாக்கீதுகளைக் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள்—இன்றைய அமைச்சர் குழுவைவிட ஆயிரமடங்கு யோக்கியமாக நடந்து கொண்டதாம் ஜஸ்டிஸ் மந்திரிசபை, "அம்மையாரின் ஜாதியாரிடம்"!



இவ்வளவு சிரமப்பட்டு அம்மையார் பேசினார்களே, பலன் கிடைக்காமற் போகுமா! நன்றாகக் கிடைத்தது—சுடச் சுட— தேசியக் காரத்திலே, தெளிவென்னும் சவுக்குக் கொண்டு, அம்மையின் மனதிலே மூண்டுகிடந்த மயக்கத்தின்மீது அமைச்சர் கோபால ரெட்டியார், வேண்டுமளவு கொடுத்தார்!

வகுப்புவாதம் கேடானது, நாசம் தருவது, அது கூடாது, அதனை ஒழித்தாக வேண்டும், என்ற அடிப்படை உண்மையை ஒப்புக்கொண்டார்—யார்தான் மறுப்பர்!—அதேபோது, அமைச்சர், வகுப்புவாதி யார், என்பதையும் எடுத்துக் காட்டினார்!!

"வகுப்பு வாதத்தை உண்டாக்கியவர்கள் பிராமணர்கள்தான் என்பது என் அபிப்பிராயம்" என்று கூறினார் கோபால ரெட்டியார்.

பூச்சாண்டி காட்டுவதுபோல டில்லித் தலைவர்களின், யோசனைகளை அடிக்கடி இழுத்துவைத்துப் பேசும் போக்கைக் கண்டு, பொறுப்பும் கவலையும், அதேபோது தன்மானமும் உள்ள யாருக்குத்தான் கோபம் பிறக்காது. அமைச்சர், "வட இந்தியாவைச் சேர்ந்தவர்களுக்கு, பிரபலஸ்தர்களாயுள்ளவர்களுக்குக்கூட இவ்விஷயம் புரிவதில்லை. சென்னை நிர்வாகத்தைப் பற்றிப் பேசும்போது இந்த விஷயத்தை நினைத்துப் பார்ப்பதில்லை." என்று கூறினார், சற்றுத் துணிவுடன்.

ஏன், துணிவுடன், என்று குறிப்பிட்டோம் என்றால், மறுநாளே தபால் பறந்திருக்கும், டில்லிக்கு—"அமைச்சர் கோபால ரெட்டியார், வடநாட்டுத் தலைவர்களைக் கண்டித்தார், ஏளனம் செய்தார்" என்று.

காங்கிரஸ் கட்சியின் தயவால் இடம் பெற்றுவிட்டு, "தன் ஜாதிக்காக" அம்மையார், பேசியது கண்டு அமைச்சர், காங்கிரஸ், வகுப்புநீதி முறையைத்தான் ஆதரிக்கிறது என்பதை விளக்குவதற்காக,

"இந்த வகுப்புவாதப் பிரச்னை பற்றி முடிவு கூறும்படி சுதந்திர இயக்க வீரர்களைக் கொண்ட தமிழ் நாடு, ஆந்திரா,

கேரளா, கர்நாடக காங்கிரஸ் கமிட்டிகளிடம் கேட்டால் அவர்களுடைய தீர்ப்பு எப்படி யிருக்கும்"?

"சர்க்கார் செய்ததைச் சரியென்று ஒப்புக்கொள்வார்களா அல்லது பிராமணர்களை ஒழித்துக் கட்டுவதற்காக க்ஷாத்திரபுத்தியுடன் நடந்துகொள்கிறதென்று சொல்லுவார்களா? அவர்கள் என்ன முடிவு சொல்வார்கள் என்பதில் எனக்கு சந்தேகமே கிடையாது."

"சமூகத்தில் வகுப்புவாத உணர்ச்சி இருந்து வருகிறது; சர்க்கார் இதைப் புறக்கணித்துவிட முடியாது. எப்படி இருக்கவேண்டும் என்பது வேறு விஷயம். ஆனால், தற்போதுள்ள பிரத்யட்ச நிலைமைக்குத் தக்கபடிதான் சர்க்கார் நடந்தாக வேண்டுமே ஒழிய, எப்படி இருந்தாக வேண்டும் என்பதைப் பற்றியல்ல. ஒருவேளை அடுத்த 50 வருஷத்தில், இந்நோய் நீங்கி, நாம் நல்லபடியாக வாழக்கூடும்."

என்று கூறினர்.

பிறகு, அம்மையார் செய்த புகாருக்கே அர்த்தமில்லை, இப்போதும், அம்மையார் எந்த ஜாதியாருக்காக வாதாடினார்களோ, அவர்களேதான், 'மேலான' நிலையில் உள்ளனர், என்பதை விளக்க, வாதமல்ல, புள்ளி விவரங்களையே வீசினர்.

"காலேஜ் விஷயங்களில், 1946-லும் அதற்கு முன்பும் அமுலில் இருந்த விதிகளே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. நகரில் 10 காலேஜ்கள் இருக்கின்றன. இவைகளில் 3 சர்க்கார் காலேஜ்கள். இவற்றில் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2,280-ஆக இருக்க வேண்டுமென அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வருஷத்தில் மொத்தம் 1963-பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்களில் 840-பேர் பிராமணர்கள் 709-பேர் பிராமணரல்லாதார், 10-பேர், ஹரிஜனங்கள், 81-பேர், முஸ்லிம்கள், 313-பேர் கிறிஸ்துவர்கள், மற்ற சமூகங்களைச் சேர்ந்தவர்கள் 10-பேர்.



இதைச் சதவிகிதமாகப் பார்த்தால்,

| | | |
|---|---|---|
| பிராமணர்கள் | 43 | சதவிகிதம் |
| பிராமணரல்லாதார் | 36 | ,, |
| ஹரிஜனங்கள் | 5 | ,, |
| முஸ்லிம்கள் | 4 | ,, |
| கிறிஸ்துவர்கள் | 15 | ,, |

33 சதவிகித ஸ்தானங்களை திறமைக்காக ஒதுக்கி வைக்க வேண்டுமென்று 'போர் கமிட்டி' சிபார்சு செய்தது உண்மையே. ஸ்ரீமதி லக்ஷ்மிபதி மந்திரியாயிருந்தபோது, இந்த சத விகிதத்தை 20-ஆக ஏன் குறைக்கப்பட்டது என்று நான் அவரைக் கேட்கிறேன். அதே காரணத்தை முன்னிட்டுத்தான், இந்த சர்க்காரும் கூட அதைக்காட்டிலும் இன்னும் குறைந்த சத விகிதத்துக்கு இறக்கி, எல்லா ஸ்தானங்களையும் வகுப்புவாரி விகிதாசாரப்படி பூர்த்திசெய்யவேண்டுமெனக் கட்டளையிட்டது. தாழ்ந்த நிலையில் உள்ள சமூகங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுப்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது.

தொழில் பயிற்சி காலேஜ்களில் ஒரே சமூகம் 90 சத விகித ஸ்தானங்களை எடுத்துக்கொள்வதென்பது ஜனநாயக முறையல்ல.

லோகல் பண்ட் ஆடிட்டில், 80 முதல் 90 சத விகித ஊழியர்கள் பிராமணர்கள். ஸீனியர்களின் கோரிக்கைகளை புறக்கணித்துவிட்டு, பிராமணர்களுக்கு மேல் பிராமணரல்லாதார்களுக்கு சர்க்கார் மேல் உத்யோகங்கள் கொடுக்கவில்லை."

நிலைமை இவ்விதமிருக்கும்போது, அம்மையார், ஆத்திரமும் அழுகுரலும் கலந்து பேசியது கண்டிக்கத்தக்கது என்பதை எடுத்துக் காட்ட,

"வகுப்பு வாதத்தால் வகுப்புவாதந்தான் விளையும். இந்த வகுப்புவாதத்தை உண்டாக்கியவர்கள் பிராமணர்கள்தான்.

என்பது என் அபிப்பிராயம். வகுப்புவாதியாயிருந்துகொண்டு மற்றவர்களைப் பார்த்து வகுப்புவாதிகள் என்று நீங்கள் புகார் செய்யக்கூடாது.

தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள மற்றவர்கள் விரும்பி "நாங்கள் வரி கொடுக்கிறோம் நிர்வாகத்தில் எங்களுக்கும் பங்கு இருக்கவேண்டும்" என்று சொன்னால் அவர்களைப்பார்த்து வகுப்புவாதிகள் என்கிறீர்கள்.

இதனால் உங்களுக்கோ அவர்களுக்கோ நன்மை இல்லை. இது மிகக் கொடியது. ஒரு துர்ப்பாக்கியமான விஷயம். இதை எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாகத் தொலைத்துத் தலை முழுகுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு இந்த மாகாணத்துக்கு நல்லகாலம்.

எல்லாச் சமூகங்களுக்கும் சம சந்தர்ப்பங்களும் சம வசதிகளும் கிடைத்து, ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள ஒவ்வொருவரும் மாகாண நிர்வாகத்தில் தனக்கும் பங்கு இருக்கிறதென்ற மகிழ்ச்சி அடையும் நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இருந்தபோதிலும் எந்தப் பக்கம் திரும்பினாலும் இது தென்படுகிறவரையில், தேசத்தின் சமூகவாழ்க்கையில் உள்ள உருப்படியான சக்திகளைச் சர்க்கார் தக்க அளவுக்குப் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது.

ஒவ்வொரு சமூகத்திலும் வகுப்புவாதிகள் உண்டு. ஹரி ஜனங்களுக்கு அதிகப்படியான பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக, வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டத்தைச் சர்க்கார் திருத்தி அமைத்தது.

வகுப்புவாதத்தை தத்தம் மனதிலிருந்து எல்லோரும் ஒழித்து விட்டால் வகுப்புவாரி பிரதிநிதித்துவச் சட்டத்தை ரத்து செய்யச் சர்க்கார் தயங்காது."

என்று விளக்கிப் பேசினார்.

எவ்வளவு இதமாகவும் ஆதாரங்களுடனும் உண்மையை



எடுத்துச் சொன்னாலும், ஏற்றுக்கொள்ள மறுத்து, வீண் கூச்சலிட்டு வந்தால் நிலைமை எப்படி இருக்கும் என்பதையும்,

"ஆகையால், இந்த சர்க்கார் வகுப்புவாத உணர்ச்சி கொண்டதென்று சொல்லுவதால் சம்பந்தப்பட்ட அங்கத்தினருக்கோ அல்லது மந்திரிகளுக்கோ யாதொரு பிரயோசனமும் கிடையாது. தேசத்தில், இது முன்னிலும் அதிகமான துவேஷத்தைத் தான் உண்டாக்கும். அதனால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை நினைத்துப் பார்க்கவும் நான் நடுங்குகிறேன்."

என்று கூறி, விளக்கினார்.

கருப்புச் சட்டையினர்பற்றி அம்மையார் பேசினதற்கு பதிலளிக்கும் முறையிலே, "கருப்புச்சட்டையினர், பேசுவதும் எழுதுவதும் ஒழுங்காக இல்லை — அவர்களைச் சட்டவரம்பிலே நிற்கும்படி சர்க்கார் செய்யும்—" என்று குறிப்பிட்டார்.

எந்தச்சட்டையினரையும் 'சட்டவரம்பு' நின்று ஒழுகும்படி செய்வதுதான், எந்தச் சர்க்காருக்கும் உள்ள கடமை. அந்தமுறையிலே, கருப்புச் சட்டையினராகிய நாம், சட்டத்துக்கு மீறிய செயல் புரிந்தால், தாராளமாக, சட்டம் அதன் வேலையைச் செய்யலாம். ஆனால் அமைச்சர், கருப்புச் சட்டையினர் பேசுவதும் எழுதுவதும், ஒழுங்கானமுறையில்லை, என்று கூறினார். வடநாட்டுத் தலைவர்களுக்கு இந்நாட்டு விஷயம்புரியவில்லை என்று அவரே எடுத்துக் காட்டியபடி, நமது பேச்சும் எழுத்தும் புரியும்படியான நிலை அவருக்கு இல்லை—மொழி வேற்றுமையால்—என்ற உண்மை நமக்குப் புரிவதால் அவருடைய அந்தக் கூற்றைக்கண்டு நாம் சீற்றம் கொள்ளவில்லை. நமக்கென ஒரு ஆங்கிலஏடும், தெலுங்கு ஏடும், இல்லையே, என்று வருத்தப்படுகிறோம்.

அமைச்சரின் அறிவுரை, அம்மையாரின் ஆத்திரத்தை ஒருவேளை அதிகப்படுத்தி இருக்கக்கூடும்—அவர் எந்த ஜாதியாருக்காகப்பரிந்துபேசினாரோ, அந்த ஜாதிபிரமுகர்கள், அமைச்சர் கோபாலர்மீது கடுங்கோபம் கொள்ளக்கூடும். வடநாட்டுத் தலைவர்களுக்கு இந்த நாட்டுநிலை புரிவதில்லை, என்று அவர் கூறினது கேட்டு, டில்லித்தலைவர்கள், அமைச்சர்மீது சீறக்கூடும். இவ்வ

ளவும் தெரிந்தும், அமைச்சர், உண்மையைக் கூறியது, அவருடைய உள்ள உரத்தைக்காட்டுகிறது. ஒருபுறம், "நீறுபூசும் நாத்திகர்!"—ஓமந்தூரார்—அவர்பக்கத்திலே, "கதர் கட்டியவகுப்புவாதி"—அமைச்சர் கோபாலர்.

காட்சி இவ்விதமா இருப்பது! காலம் இப்படியா மாறுவது! —என்று கலங்கி, கோபித்துப் பயன் இல்லை.

உண்மை, மெள்ளமெள்ள, ஆனால் உறுதியாக, நிலைத்துநிற்கும். கருப்புச்சட்டைக்காரர், சட்டசபையை எட்டிப் பார்க்காதிருக்கும் போதே, காவி உடையிலே உலவும் கயவர்களைப் பற்றிக் கண்டிக்கும் பேச்சுக்கிளம்பிவிட்டது. காங்கிரஸ் மந்திரி வாயாலேயே,

"வகுப்புவாதத்தை உண்டாக்கியவர்கள் பிராமணர்கள்தான் என்பது என் அபிப்பிராயம்" என்றுபேசியாகிவிட்டது.

கருத்துள்ளோர், காலம் காட்டும் குறிகளைக்கண்டு திருந்த வேண்டும்—காவிநக் கனைகளையே நம்பிக்கொண்டு இருந்துவிடக் கூடாது.

நாட்டு விடுதலைப் படையிலே தளபதிகளாக இருந்து, செல்வாக்குப் பெற்று, அமைச்சர்களானவர்களையே, 'ஜாதிய'த்தின் மூலம் ஆதிக்கம் செலுத்துபவர்கள், இந்தப்பாடு படுத்துகிறார்களென்றால், காங்கிரஸ் செல்வாக்கோ, ஆட்சிமன்றச் செல்வாக்கோ இல்லாத நாம், இந்த ஜாதியத்தைக் கண்டிக்கும்போது, ஆதிக்கக்காரர்கள் எவ்வளவு பாடுபடுத்துவார்கள், என்பதை விவரிக்கத் தேவையில்லை.

துணிவுடன் அமைச்சர் கோபாலர், "வகுப்புவாதத்தை உண்டாக்கியவர்கள் பிராமணர்தான்" என்று கூறியதுகேட்டு, எவ்வளவு கொக்கரிப்புக் கிளம்பிவிட்டது! 'இந்து' பத்திரிகை, தீ ப் பொ றி பறக்க ஒரு தலையங்கம் தீட்டிவிட்டது. அமைச்சர் மீது வந்த கோபம், அமைச்சர் குழு மீதே பாய்ந்துவிட்டது. சமாரியான பாணங்கள்! ஒன்றுக்கும் உதவாதது—உருப்படியாக ஒரு காரியமும் செய்யாதது—ஊராருக்குச் சோறு போதுமான அளவு கிடைக்கவும் வழி செய்ய முடியாதது—கவைக்குதவாதது—என்



றெல்லாம், அளவந்தார்கள் மீது கண்டனத்தைக் கக்கி இருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கு சட்டசபையிலே கிடைத்துள்ள செல்வாக்கைப் பற்றிக் கேலியும் செய்திருக்கிறது. எத்தனை நாளைக்கு இந்த வாழ்வு என்று கிண்டல் செய்கிறது. டில்லி சர்க்கார், நேர்வழி செல்ல, குறுக்கு வழியிலும் கோணற் பாதையிலும் செல்கிறது சென்னை மந்திரிசபை என்று குத்தலாக எழுதுகிறது. அமைச்சர் கோபாலர், வடநாட்டுத் தலைவர்களை ஏளனம் செய்கிறார், என்று சாடி சொல்கிறது. இவ்வளவும், அமைச்சர், உண்மையை உரைத்துவிட்டாரே—நெடுங்காலமாக, மறைத்து வைக்கப்பட்டிருந்த உண்மையைத் தைரியமாகக் கூறிவிட்டாரே, என்ற வயற்றெரிச்சலின் விளைவு. 'மித்திரன்' சும்மா இல்லை! தினமணியும் ஒரு தலையங்கம் தீட்டிவிட்டது. குட்டிகளும் சும்மா இல்லை! கும்பல் பூராவும், கிளம்பிவிட்டது, கோபாலர் மீது பாய! உண்மையை உரைப்பவர் மீது என்னென்ன விதமான, 'பழி' சுமத்தப்படும் என்பது, அமைச்சர்களுக்கு, ஓரளவுக்கு விளங்கி இருக்கும் என்று நம்புகிறோம்.

'தினமணி'—வகுப்புவாரி முறை, 'சாமான்யமான' விஷயம், என்று துவக்கி, அந்தச் சாமான்யமான விஷயத்திலே, தன் சமர்த்து முழுவதையும் காட்ட முயற்சித்திருக்கிறது.

"இம்மாகாணத்தில் சுமார் 4 இலட்சம் பிராமண வீடுகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். உத்யோகத்தை நம்பிவாழும் வீடுகள் 20000 கூட இருக்காது. மீதமுள்ள 3¾ இலட்சம் குடும்பங்கள் எப்படியோ வாழ்க்கையை நடத்தத்தான் செய்கின்றன" என்று தினமணி தீட்டுகிறது—ஒருவகையான திருப்தியுடன்—உத்யோகம் இல்லாவிட்டாலும், பிராமணர்கள், "எப்படியோ வாழ்க்கையை நடத்தத்தான் செய்கின்றனர்" என்ற திருப்தியுடன்! மகிழ்ச்சி! எப்படியோ வாழ்க்கையை நடத்தட்டும்! நாலு இலட்சம் குடும்பங்களிலே, கால் இலட்சம் குடும்பங்களுக்கு மட்டுமே உத்யோகம் பெறும் பிரச்னை முக்கியமானதாக இருக்கும்போது, மற்ற மூன்றே முக்கால் இலட்சம் குடும்பத்தினர், எப்படியோ வாழ்க்கையை நடத்திக்கொண்டு வரும்போது, இந்த அற்ப பிரச்னைக்காக ஏன், இந்த ஜாதித் தலைவர்கள், இவ்வளவு மல்லுக்கு நிற்க வேண்டும்? ஒரு தலைவர் பாக்கி உண்டா? வகுப்புவாரி முறையை

எதிர்க்காத பார்ப்பனத் தலைவர் உண்டா? நாலு இலட்சம் குடும்பங்களிலே கால் இலட்சம் குடும்பம்தான் உத்யோகத்தை நம்பி வாழுகின்றன, என்று கூறும் அளவுக்கு அற்பமான இந்த விஷயத்தைக் குறித்து, அகில இந்தியாவில் மட்டுமல்ல, அமெரிக்கா, பிரிட்டனில் கூட கிளைவிட்டுத் தழைத்திருக்கும் 'இந்து' ஏன், அவ்வளவு அக்கறை காட்டுகிறது! அக்கரையா? ஆத்திரம் காட்டுகிறதே! ஏன்? ஒரு தலைவராவது, ஒரு ஏடாவது, பிராமண சமுகத்தாருக்கு, அல்லது, அந்தக் குலத்திலே, உத்யோகப் பிரச்னையை முன்னணி நிறுத்திப் பேசுபவருக்காவது, ஏன் இந்த அற்பப் பிரச்னைக்காக உங்கள் அரிய புத்தியையும் பொன்னுன நேரத்தையும் செலவிடுகிறீர்கள்—இந்தப் பாழாய்ப் போன உத்யோகத்தை நம்பித்தானு நமது சமுகத்திலே, பெரும்பாலானவர்கள் வாழுகிறுர்கள், ஏன் இந்தச் சாமான்யப் பிரச்னைக்காகச் சச்சரவிட்டுக் கொள்கிறீர்கள், என்று புத்திமதி கூறினதுண்டா? 'தினமணி' அன்றைய தலையங்கத்திலேயே கூட, இந்தப் புத்திமதியைக் கூறவில்லையே! அற்ப விஷயம் என்று ஆரம்பித்து, படிப்படியாக வாதாடி, இறுதியில், வகுப்புவாரி முறை, தீதானது, நீக்கப்படவேண்டியது என்று தான், 'தீர்ப்பு' அளித்திருக்கிறது.

உத்யோகம் பெறும் பிரச்னை, உண்மையிலேயே அற்பமானது — அலட்சியப்படுத்தப்பட வேண்டியது என்றால் இவர்கள், ஏன் இவ்வளவு, மாரடித்துக் கொள்ளவேண்டும், இதற்காக!

உத்யோகங்களிலே, வகுப்புவாரி, நீதி கிடைத்துவிட்டால் போதும், சமுதாயம் உருப்பட்டுவிடும், சகல சிக்கல்களும் தீர்ந்துவிடும், பார்ப்பனரல்லாதார் சமுதாயம் உடனே பொற்காலம் பெற்றுவிடும் என்று கருதும் சிறுமதியினரல்ல, திராவிடர் கழகத்தினர்.

நாம், வேருேரிடத்திலே விளக்கியுள்ளபடி, பிரச்னை, இரு கூறுகள் கொண்டது — ஒன்று வகுப்புகள் ஏற்பட்டதால், உண்டான கேடுகளைக் களைந்து, ஒன்றே குலம் என்ற உன்னத இலட்சியத்தை உருவாக்குவது—மற்ருென்று, இந்த உருவாக்கும் காரியம் நடைபெறும்போது, ஓரே குலம், பலகாலமாக அடைந்துள்ள, 'ஏகபோக' மிராசுத் திட்டத்தை முறிப்பது. தினமணி



குறிப்பிட்டிருக்கும் 'கால் இலட்சம் பிராமண குடும்பங்களின்' நிலையை மட்டுமே நாம் கவனத்திற் கொண்டு, அந்த உத்யோகப் பிரச்னையையே, உயிர்ப் பிரச்னையாகக் கருதும், ஏமாளிகளல்ல! மற்ற மூன்றே முக்கால் இலட்சம் குடும்பங்களும். "எப்படியோ" வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகின்றன, என்று 'தினமணி' குறிப்பிடுகிறதே, அந்த "எப்படியோ" வைப் பற்றியும் தான், கவனிக்கிருேம். 'எப்படி' வாழ்கிருர்கள்? எப்படி வாழ முடிகிறது! வெட்டாமல் குத்தாமல், விதைக்காமல் அறுக்காமல், குனியாமல் நிமிராமல்; பாடுபடாமல், அந்த ஒரு சமுதாயம் மட்டும், இன்று நேற்று அல்ல, மூதாதையர் காலம் தொட்டு, "எப்படியோ" ஏற்றத்துடன் வாழ்ந்து வருகிறதே—அது எப்படி? என்ற ஆராய்ச்சியையும்தான், கழகம்நடத்திவருகிறது. நாட்டிலே, பார்ப்பனர் நீங்கலாக மற்றக் குலத்தார், வாழ்ந்துவரும் முறைக்கும், பார்ப்பனர் வாழ்க்கையை நடத்தும் முறைக்கும், பன்னெடுங்காலமாக, ஏன், மறைக்க முடியாத ஒரு மாறுதல் இருக்கிறது, என்று, மக்களைச் சிந்திக்கச் செய்து வருகிறது.

கல் உடைக்கும் பாட்டாளி, கட்டை வெட்டிப் பிழைப்பவன், கலப்பை எடுத்து உழுபவன், வண்டி ஓட்டுபவன், பாரம் சுமப்பவன், புதை பொருள் எடுப்பவன், வேட்டையாடி வயிறு வளர்ப்பவன், மீன் பிடித்து வாழ்பவன், பாதை போட்டு வாழ்பவன், நெசவாளி, எனும் இன்னபிற, பாடுகள் பட்டு மற்றச் சமூகம் வாழ்ந்து வந்திருக்கிறது பன்னெடுங்காலமாக! இதுபோல, ஒரு பாடும் படாமல், உடலை உருக்கும் தொழிலில் ஈடுபடாமல், நகத்தில் அழுக்குப்படியாமல், "எப்படியோ" வாழமுடிகிறதே, ஓரே ஒரு குலத்தாரால், இதென்ன ஆச்சரியம், என்று எண்ணிப் பார்த்து, தான் கண்ட முடிவை நாட்டுக்கு எடுத்துரைத்து வருகிறது கழகம்!

ஜாதி முறையே, ஒரு தந்திரமான சுரண்டல் திட்டம், என்பது தான் கழகத்தின் கருத்து. பாடுபடாமல் ஒருசிறு கூட்டம், வாழவும், பெரும்பாலான மக்கள் 'செக்கு மாடுகள் போலக் கஷ்டப்பட்டே பிழைத்துத் தீரவுமான நிலைமை ஏற்பட்டதே, ஜாதிமுறையினலே தான், என்று கழகம் கருதுகிறது.

உலகிலே, பல்வேறு நாடுகளிலேயும், ஆதிக்கம் செலுத்த விரும்பி, சிறுகூட்டத்தினர் அந்தந்த நாட்டு நிலைமைக்கும், மக்களின் மனவளத்துக்கும் ஏற்றமுறையான, சுரண்டல் திட்டத்தை அமைத்துக் கொண்டனர். ஆனால் எல்லா நாடுகளிலும், முதன் முதலாக ஏற்பட்ட ஆதிக்கத் திட்டம், புரோகித ஆட்சி தான் என்பதை அறிஞர்கள் யாவரும், எடுத்துக்காட்டியுள்ளனர். ஆண்டவனின் அருளைப் பெற்றுத்தரவும், கோபத்தையும் சாபத்தையும் ஏவவும் தங்களுக்கு ஓர்வித 'மந்திர சக்தி' இருப்பதாகக் கூறிய, புரோகிதக் கூட்டத்திடம், பெரும்பான்மையினர் பணிந்தனர், பயந்தனர்—அந்தக் கூட்டத்தின் மனம் குளிர்ந்தால் மகேசன் மகிழ்வான், அவர்களின் மனம் கொதித்தால், ஆண்டவன் தங்களை அழிப்பான் என்று எண்ணினர்—மனமார.

இயற்கையின் கோலங்களைக் காட்டி, புரோகித வகுப்பார், பாமரரை மிரட்ட முடிந்தது. பூமி வெடிக்கும்—எரிமலை நெருப்பைக் கக்கும்—அலைகடல் பொங்கி எழும்—காட்டு மிருகங்கள் நாட்டுக்குள் புகுந்துவிடும்— கடுங்காற்று வீசும்—கொடு நோய் பரவும்—என்றெல்லாம் கூறமுடிந்தது. இந்தப் புரோகித ஆதிக்கத்தின், கடைசிச்சின்னமாகவே, பார்ப்பனிய முறையை — ஜாதி முறையை—திராவிடர் கழகம் கருதுகிறது. பல்வேறு நாடுகளிலேயும் புரோகித ஆட்சிக்கு, மன்னர்களும் மாவீரர்களுங்கூட அஞ்சி நடந்துகொண்டனர். மணிமுடி தரித்த மன்னனை ஜடாமுடி தரித்தவன், மிரட்டும் காலம் இருந்தது. ராஜகுரு—ஆலயப் பூஜாரி—ஆஸ்ரமத் தலைவன், என்று, பலவகையான நிலைகளிலே, புரோகித ஆட்சி இருந்து வந்தது. அந்த ஆதிக்கத்தின் கட்டு, காலத்தாக்குதலால் தளருவதற்கு முன்பு, அந்த ஆதிக்கம், குடித்த இரத்தமும், கொன்று குவித்த தியாகிகளும், கொஞ்சமல்ல! அதன் பயங்கரப் பலி பீடத்திலே, எண்ணற்ற, நல்லறிவாளர்கள் சாய்ந்தனர்!

புரோகித ஆதிக்கம், இந்நாட்டிலே, ஜாதியமாக—வர்ணாஸ்ரமமாக உருவெடுத்து —அதனைக் காப்பாற்றும், 'திருப்பணி'யை ஒரு ஜாதி மேற்கொண்டு விட்டதால்—அந்தக் காரியத்தை இன்றும், அந்த ஜாதியினர், விடாப்பிடியாகக் கொண்டிருப்பதால், மற்றநாடுகளிலே, 12, 13, 14, 15, 16, ஆகிய நூற்றாண்டுளிலே துவக்கப்



பட்டு, மகத்தான வெற்றியை மக்களுக்குப் பெற்றுத் தந்த, அறிவுப் புரட்சி, இந்த நூற்றாண்டிலே, இங்கு நடைபெற வேண்டிய 'கேவல' நிலைமை இருக்கிறது. வேறு எவ்வளவோ, நூண்ணறிவுப் பிரச்னைகளைப் பற்றி எல்லாம் கவனிக்கவேண்டிய இந்நாட்களிலே, நாம், ஜாதிமுறை தேவையா, ஒழியவேண்டுமா, எங்ஙனம் என்பது பற்றிப் பேசும் வேலையில் ஈடுபட நேரிடுகிறது. இது நாம் எவ்வளவு பிற்போக்கிலே இருந்துவந்து விட்டோம், அறிவுத் துறையிலே, என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இன்னமும், ஜாதி ஒழிப்புப் பிரச்னையை ஏதோ ஒரு கட்சியினர் நடத்தும், துவேஷப் பிரசாரம் என்று திரித்துக் கூறவும், சமயம் கிடைக்கும்போதெல்லாம் தாக்கவும், அதிகாரம் கிடைக்கும் போதெல்லாம் அடக்குமுறை வீசுவுந்தான், பலருக்குத் தெரிகிறதே ஒழிய, அனைவரும் கூடி, கூட்டாக, இந்த அரும்பணியைச் செய்தால், ஜாதிச் சனியனை ஒழித்துவிட முடியுமே, என்ற அறிவுத் தெளிவும், நேர்மைத் திறனும், நெஞ்சு உரமும் ஏற்படவில்லை. ஆங்காங்கு, அசைவு கொடுத்திருக்கிறது என்பது உண்மை—அகமகிழ்கிறோம். அமைச்சர் கோபாலர்போல, சீற்றம் பொங்கும் போது, உண்மையை உரைக்கச் சிலர் துணிகிறார்கள்—பாராட்டுகிறோம்—எனினும், ஜாதி முறை என்பது, ஆதிக்கத் திட்டம், சுரண்டும் சூட்சமம், ஆதிகாலத்துப் புரோகித ஆட்சி முறையின் கடைசிக்கட்டம், என்ற அறிவாராய்ச்சி பெற்று, நமது நாட்களிலே, இதனை ஒழித்தாகவேண்டும், என்று ஆற்றலுடன், ஆர்வத்துடன், கஷ்ட நஷ்டம் ஏற்கும் சுபாவத்துடன், பணி புரிவோரின் தொகை—திராவிடர் கழகத்திற்கு வெளியே — அதிகமில்லை. இன்னமும், திராவிடர் கழகம் ஏதோ வேண்டுமென்றே 'ஒரு ஜாதியார்' மீது வீணான துவேஷத்தைப் பரப்புவதாகவே, பழி சுமத்துவதைத் தங்கள் முற்போக்குக்கு அத்தாட்சிப் பத்திரமாக்கிக் கொள்வதிலேயே முனைந்திருக்கிறார்கள்—முன்னணிக்கு வந்துவிட்ட சிலர். என்ன இலாபம், இதனாலே, திராவிடர் கழகத்துக்கு! என்ன விபரீத விளைவுகள் ஏற்பட்டுவிட்டன, அதன் பிரசாரத்தாலே! என்றாவது, எங்காவது, 'பலாத்காரம்'—'இம்சை'—நடைபெற்றதா, பிரசாரத்தினால்? கிடையாது! திராவிடர் கழகத்தார் தாக்கப்பட்டுள்ளனர்—கண் இழந்தவர் உண்டு, கரம் ஒடிந்தவர் உண்டு

கிராமங்களை விட்டு விரட்டப்பட்டவர்கள் உண்டு, தொழிலிலே இருந்து துரத்தப்பட்டவர்கள் உண்டு, குடும்பத்திலே கொடுமை, பல்வேறு சித்திரவதை இவைகளுக்கு ஆளான திராவிடர் கழகத்தார் உண்டு!

ஒரு சிறு கூட்டத்தார்மீது, உண்மையாகவே துவேஷப் பிரசாரம், நடைபெற்றிருக்குமானால், திராவிடர் கழகத்தின் பிரசார முறை, துவேஷத்தை, பலாத்காரத்தை, இம்சையை, அடிப்படையாகக் கொண்டதாக இருந்திருக்குமானால், தமிழகம், புன்னகைப் பூந்தோட்டமாகவா இருந்திருக்கும் — புனல் நிறைந்த கண்ணினராக, கழகத்தார் இருக்கவேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்குமா! எந்தச் சமயத்திலே, என்ன பழி சுமத்தப்படுமோ, யார் என்ன இழிசொல் கூறுவரோ, சட்டத்தைச் சவுக்காகக் கொண்டு என்னென்ன தண்டனை தரப்படுமோ, என்றையத்தினம் சிறைச்சாலை கூவி அழைக்குமோ, என்று 'சதா சர்வ காலமும்,' ஆபத்தையும் கஷ்டத்தையும் எதிர்பார்த்தவண்ணம், திராவிடர் கழகம், இருக்கிறது. இந்த உண்மையை மறைத்து, ஒரு ஜாதியார் மீது துவேஷப் பிரசாரம் செய்யப்படுவதால், அவர்களுக்கு 'அச்சமாக' இருப்பதாகவும், இதற்கு ஆளவந்தார்கள், தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்றும், ஒவ்வொரு நாளும், கலகமூட்டப்பட்டு வருகிறது! மகஜர்கள்—மனுக்கள்—பத்திரிகைகளிலே கட்டுரைகள்—தலையங்கங்கள் — கிளம்பியவண்ணம் உள்ளன! சட்டத்திலே, இன்னின்ன செக்ஷன்கள் உள்ளன, கழகத்தாரைத் தண்டிக்க என்று இலவச ஆலோசனைகள், அடிக்கடி 'இந்து' இதழ் மூலம் தரப்பட்டு வருகின்றன.

புரோகித ஆதிக்கத்தை முன்னாளில் எதிர்த்தவர்கள் பட்ட கஷ்டங்கள் அனைத்தும், திராவிடர் கழகத்தாருக்கு நன்கு தெரிந்திருப்பதால்தான், இவ்வளவு இடையூறுகளையும் தாங்கிக்கொள்ளும் சக்தி ஏற்பட்டிருக்கிறது.

சமணர் கழுவேற்றப்பட்டதும்—இராமாநுஜர் துரத்தப்பட்டதும், நாயன்மார்கள் கொடுமைப் படுத்தப்பட்டது — வள்ளலார் எதிர்க்கப்பட்டதும் — மதவாதிகளுக்குள்ளாகவே, ஏற்பட்ட கருத்துவேற்றுமையின் விளைவாக இருந்திருக்கும்போது, மதத்தின்



175319

பெயர்கூறி, மனுமாந்தாதா காலமுதற்கொண்டு, இங்கு இருந்துவரும் புரோகித ஆதிக்கத்தை எதிர்க்கத் துணியும்—துணிந்து எதிர்க்கும்—எதிர்த்து வெற்றிகாணும்—நமக்கு, இழைக்கப்படும், கொடுமைகள் அவ்வளவும், சூட்டப்படும் இழிபட்டங்கள் எல்லாம், சவக்குழியை நெருங்கிக் கொண்டிருக்கும், புரோகித ஆதிக்கத்தின் புலம்பல் என்றே நமக்குத் தோன்றுகிறது. புரோகித ஆதிக்கத்தை எதிர்த்து நாம் நடத்தும் அறிவுப் புரட்சியை, நாத்திகம் என்றோ, தேசத்துரோக மென்றோ, சமூகக் கேடு என்றோ, துவேஷப் பிரசாரம் என்றோ, ஏதேனும் பழி கூறித்தான், மறுக்க முடிகிறதே தவிர, புரோகித ஆதிக்கம் இருக்கத்தான் வேண்டும் — அதைக் குறை கூறுவதே 'பாபம்' என்று துணிந்து கூறுவோரின் தொகை, மிக மிகக் குறைந்துவிட்டது—அலட்சியப் படுத்தப்பட வேண்டிய அளவுக்குக் குறைந்துவிட்டது. எவ்வளவோ இம்சைக்கு இடையிலே நடமாடினாலுங்கூட, நமக்கு, அகமகிழ்ச்சியும் நம்பிக்கையும் இருக்கக் காரணமாக இருப்பது, இந்த மகத்தான மாறுதல்தான்! இதனைத்தான் நாம், மூலபலம் முறிகிறது என்று கூறுகிறோம்.

நாட்டை மீட்கும் நற்பணி புரிந்தவர்கள்—விடுதலைப் படையிலே முன்னணி நின்றவர்கள்—என்ற காரணம், நெடுநாட்களுக்கு, நம்மைத் தாக்கும் கருவியாகப் பயன்பட்டு விடாது. அதன் கூர், தாக்குதலுக்குத் தாக்குதல், மழுங்கிக்கொண்டேதான் வரும். ஜாதி ஒழியத்தான் வேண்டும்—என்று காங்கிரஸ் வட்டாரங்களிலேயே முழக்கம் கிளம்பிவிட்டது!

ஜாதி பேதத்தினாலேதான் நாடு கெட்டது—என்று மூவர்ணக் காரரே, முரசு கொட்டுகின்றனர்.

ஜாதியைப் பிரமாதப்படுத்தி, பிழைப்பை—பிழைப்பை மட்டுமல்ல, ஆதிக்கத்தை வளர்த்துக் கொண்டவர்கள், 'பார்ப்பனர்' என்பதை—அறிஞர்கள்—ஆராய்ச்சியாளர்கள் கூறத் தலைப்பட்டு விட்டார்கள். மூலபலம் முறிகிறது! வேக வேகமாக!! திராவிடர் கழகத்தாராகிய நம்மீது அடக்குமுறைப் பாணங்கள் பாயும் வேகத்தைவிட வேகமாக, மூலபலம் முறிகிறது.

மனம் திறந்து பேசினால், எங்கே, நம்மையும், நாத்திகன் என்று நிந்தித்து விடுகிறார்களோ, என்ற அச்சம் காரணமாகச் சிலர், உண்மையை உரத்த குரலிற் கூறாமலிருக்கின்றனர். ஜாதி முறையைக் கண்டிப்பதோடு, திராவிடர் கழகத்தையும், சற்றுக்கண்டித்துப் பேசாவிட்டால், நம்மையும், திராவிடர் கழகத்துடன் சேர்த்து விடுவார்கள், என்று பயந்து சிலர், மனம் குமுறுகின்றனர்.

“பெரியார், அவர் காலத்திலே பார்ப்பனரிடம் ஏமாந்து போய்விட்டார், நான், அவ்விதம் ஏமாறமாட்டேன்.

இனி இம்மாகாணத்தைப் பார்ப்பனரல்லாதார்தான் ஆளப்போகிறார்கள்.

இனி ஒரு இருபது ஆண்டுகளுக்காவது, ‘பிராமணர்கள்’ உத்யோகங்களுக்குப் போகாமலிருக்க வேண்டும்.”

என்று, எந்தக் காமராஜரை, ‘பிரம்மகுலரட்சகர்’ என்று சித்தம் குழம்பிய சிலர், எண்ணுகிறார்களோ, அதே காமராஜர் கூறிடக் கேட்கிறோம்.

வகுப்புவாரி முறையை வேண்டுமென்றே, பார்ப்பனர்கள்தான் எதிர்க்கிறார்கள்—என்று சமரசம் தெரிந்த அறிஞர்கள் கூறிடக் கேட்கிறோம்.

வகுப்புவாதத்தை உண்டாக்கியவர்களே பார்ப்பனர்கள்தான் என்று அமைச்சர் கோபாலர் கூறிடக்கேட்கிறோம்!

மூலபலம் முறிகிறது, என்பதற்கு வேறென்ன சான்றுகள் வேண்டும்.

“இப்போது நடைபெறுவது காங்கிரஸ் போர்வையிலே உள்ள திராவிடர்கழக ஆட்சிதான்.

நீறுபூசும் இராமசாமிக்கும் நீறு பூசாத இராமசாமிக்கும் அதிக வித்யாசமில்லை.

இந்தமந்திரிசபையே, பிராமணர்களை ஒழித்துக்கட்டுவதை நோக்கமாகக் கொண்டதாக இருப்பதுபோலத் தெரிகிறது.”



இவ்விதமெல்லாம், பார்ப்பனத் தலைவர்களும், பார்ப்பன ஏடுகளும் பதைபதைத்துக் கூறுகின்றன.

மூலபலம் முறிந்துகொண்டு வருவதை, ஆதிக்ககாரர்களும் உணர்ந்து கொண்டுள்ளனர்.

அவர்களின் நம்பிக்கை எல்லாம், டில்லி மீது!

சென்னையிலே, இனித் தங்கள் ‘செல்வாக்கு’ நாளுக்கு நாள் தேய்ந்துபடும், கருப்புச்சட்டைக்காரனுக்கும் கதர்ச்சட்டையினருக்கும், விரோதமூட்டிவிடுவதன் மூலம், சரியும் செல்வாக்கை—அழியும் ஆதிக்கத்தை—நிலை நிறுத்திக்கொள்ள முடியாது, என்பதை ஆதிக்கக்காரர்களே உணர்ந்துவிட்டனர்.

இதனை நன்கு உணர்ந்துதான், அமைச்சர் கோபாலர், தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்னாடக, காங்கிரஸ் கமிட்டிகளின் கருத்தை வேண்டுமானால், கேட்டுப் பாருங்கள்—வகுப்புவாரி முறைக்கு ஆதரவாகத்தான் ‘தீர்ப்பு’ கிடைக்கும் என்று கூறினார், சட்டசபையில்.

மூலபலம் முறிகிறது! காலம்வெல்கிறது! பாமரரின் மனமயக்கம் தெளிகிறது! ஆதிக்கக்காரர்கள் அஞ்சுகின்றனர்! அச்சத்தின் காரணமாக அலறுகிறார்கள்—பிடி! அடை! திராவிடர் கழகத்தை ஒழித்துக்கட்டு!!—என்றெல்லாம்! என்னசெய்யலாம், வீழ்ச்சியைத் தடுக்க, என்று, விம்மும் நிலையில், யோசிக்கின்றனர்.

ஓமந்தூரார் கெட்டுவிட்டார்—காமராஜரைக் கருவியாக்கிப் பார்ப்போமா—சுப்பராயன் முன் சூடம் கொளுத்திப் பார்ப்போமா—பிரகாசத்துக்குப் பொங்கல் படைப்போமா,—என்று, யோசனை பிறக்கிறது. ஆசை வெட்கமறியாதல்லவா!

மந்திரிசபைகளை மாற்றுவதன் மூலமோ, அடக்குமுறையை அதிகப்படுத்துவதன் மூலமோ, ‘ஜாதியம்’ பிழைத்துக்கொள்ள முடியாது, அதன் மீது வீழ்ந்துள்ள ‘தாக்குதல்’ சாமான்யமானதல்ல! ‘ஜாதியம்’ எவ்வளவு பலிகொள்ள முடியுமோ, அவ்வளவும்

கொண்டாய்விட்டது. இனி, கடைசிக் கூச்சலுடன், ஜாதியம், கல்லறை சென்றே தீரும். இடையே, நம்மைக் கொஞ்சம் இம்சிக்கும். நாம் தாங்கிக்கொள்வோம்!

ஆனால், காலம் தரும் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளும் சக்தி, ஜாதியத்துக்குக் கிடையாது—அதன் துணைகொண்டு துரைத்தனம் நடத்த விரும்பும் ஆதிக்கக்காரர்களுக்குக் கிடையாது.

ஜஸ்டிஸ் கட்சி, வகுப்புவாரி முறையைப் புகுத்தியதற்காக, அதன் மீது, தாக்குதலை நடத்திய 'தேசியத் தொண்டு' இன்று, அற்புதமாகமாறிவிட்டதை, ஆதிக்கக்காரர்கள் உணரவேண்டும்.

"சென்னை மேல்சபை விவாதங்களை நண்பர்கள் பார்த்திருப்பார்களென்றே நம்புகிறோம். இந்த விவாதங்களில் ரொம்பக் காரசாரமாய் விவாதிக்கப்பட்ட இரு விஷயங்களைக் குறித்த பேச்சுகளையும் அனைவரும் கவனித்திருப்பார்கள். அதில் முதல் விஷயம் ஜமீன் ஒழிப்பு மசோதா பற்றியது. இரண்டாவது விஷயம்தான் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ முறை சம்பந்தமானது. அதாவது பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளை அனுமதிக்கும் முறையை.

திறமைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று கூறி வரும் கூட்டத்தைச் சேர்ந்த சில மெம்பர்கள் மேல்சபையில் கரடியாய்க் கத்தினார்கள். ஜாதிகளைக் காட்டி அனுமதி இல்லை என்பது என்ன நியாயம் என்று ஜாதிப் பற்றுதலை எல்லாம் துறந்ததாகக் காட்டிக்கொள்ளும் சிலர் கேட்டார்கள். இதில் பீமராவ், சூரியநாராயண ராவ் என்னும் அங்கத்தினர்கள் காட்டின அக்கறையைப் பார்த்தபொழுது மூர்ச்சை அடையும்படியாக இருந்தது. கல்வி மந்திரியைக் கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டு திணற அடித்தார்கள். அவ்வளவுக்கும் சமாளித்த கல்வி மந்திரி ஸ்ரீ. அவனாசிலிங்கம் செட்டியாரைப் பாராட்டுகிறோம்.

* * *

உத்தியோகங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் எந்த ஒரு வகுப்பாருக்கும் ஏகபோகம் இருக்கக்கூடாது என்ற ஒரே



கருத்தில்தான் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வந்தது. இதை அமுலுக்கு கொண்டு வந்தவர்கள் ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபையினர். இந்த முறை கடந்த பல வருடங்களாக அமுலில் இருந்து வருகிறது. இந்த முறைக்குப் பச்சையாக அர்த்தம் சொல்ல வேண்டுமென்றால், பிராமணர்கள் ஏகபோகம் அனுபவித்து வந்ததைத் தடுப்பதுதான் அர்த்தம். சகல துறைகளிலும் பிராமணர்கள் ஏகபோகம் அனுபவித்து வந்தார்கள். உத்தியோகங்களிலும் சரி, பள்ளிக்கூடங்களிலும் சரி, பிராமணர்களே அதிகப்படியாக இருந்தார்கள். அதிகப்படி என்றால் 100-க்கு 60 என்றோ 70 என்றோ அல்ல. 100-க்கு 95 வீதம் இருந்து வந்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இவ்வாறு ஒரு வகுப்பார் ஆதிக்கம் வகித்து வருவது இதர வகுப்பாருக்குச் சகல விதத்திலும் இடைஞ்சலாக இருந்தது. இடைஞ்சல் என்ற பதத்துக்குப் பதிலாகப் பாதகம் என்று சொன்னால்கூடத் தகும். அவ்வளவு தூரம் நிலைமை மோசமாக இருந்தது. அப்படியும் இந்தப் பிராமணர்கள் தொகை மொத்த ஜனத் தொகையில் அதிகமாக இருந்ததோ என்றால் இல்லை என்பதை எவராலும் மறுக்க முடியாது. மொத்த ஜனத் தொகையில் மூன்று சதவிகிதம் தான் பிராமணர்கள் இருக்கிறார்கள். எனவே ஜனவிகிதாச்சாரப்படி பார்த்தாலும் அவர்கள் அனுபவித்து வந்த உரிமைகள் ரொம்ப அநியாயம் என்பது தெரியும். இந்த அநியாயத்தை ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்தார்கள். இந்த அநியாயத்தைப் போக்கவேண்டுமென்ற நோக்கத்தில் தான் ஜஸ்டிஸ் கட்சியே தோன்றியது.

வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை ஒழியாததற்கு ஒரே ஒரு காரணம். அம்முறையின் நியாய அடிப்படைதான். ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் மட்டும் ஒரு குறிப்பிட்ட துறையில் நிலையூன்றிவிட்டால் அவர்களை நாளாவட்டத்தில் அசைக்கவே முடியாது. என்னதான் கஜகர்ணம் போட்டாலும் அவர்களை அங்கிருந்து கிளப்ப முடியாது. நிர்வாக யந்திரத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மட்டும் இருந்தால்

பெரும்பாலான இதர வகுப்பாருக்கு நன்மை கிடைக்குமென்ற நிச்சயம் ஏற்பட முடியாது. ஏன் ஏற்பட முடியாது என்று நண்பர்கள் கேட்கலாம். இதற்கு இந்தியாவில் உள்ள நிலைமை அப்படித்தான் என்று பதில் சொல்லுவதைத் தவிர வேறு எதுவும் கூற முடியாது. ஜாதித் துவேஷமும் வகுப்புத் துவேஷமும் இந்தியாவில் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ரொம்பக் காலமாகவே இருந்து வருவதாகும். இது காலம் போகப் போகக் குறைந்துகொண்டு வருகிறது. இதே ரீதியிலோ, அல்லது இதைவிடத் தீவிரமான வேகத்திலோ சென்றால் இன்னும் கொஞ்சக் காலத்தில் துவேஷங்களெல்லாம் ஒழிந்துவிடும். அவ்வாறு துவேஷங்கள் ஒழிவதற்கு நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும். ஜனங்களுடைய பொருளாதார நிலை உயர வேண்டும். பொருளாதார ஏற்றத் தாழ்வு இருக்கும்வரை துவேஷங்களும் மாச்சரியங்களும் இருக்கத்தான் செய்யும். எனவே தேசியப் பற்றுடையோரும், சர்வ தேசியப் பிரியர்களும், பரந்த உள்ளமும் பண்பாடுடைய கலாச்சாரமும் பெற்றிருப்போர்களும் இந்த இலட்சியத்திற்காகப் பாடுபட வேண்டும். பொருளாதாரப் புரட்சி நிலை ஏற்படும் வரை, மறைந்து வரும் துவேஷங்களையோ, குறைந்துகொண்டு போகும் விருப்பு வெறுப்புகளையோ வளர்க்கப் பாடுபடக் கூடாது. துரதிர்ஷ்டவசமாகச் சில பிராமண அன்பர்கள் இதைத்தான் செய்கிறார்கள். எப்படி என்பதைப் பார்ப்போம்.

சில பிராமணர்கள் ஜாதிய உயர்வைக் கைவிட முடியாது என்று கூறுகிறார்கள். இதைப் பச்சையாகக் கூறாமல் திறமை என்றும் யோக்கியதாம்சம் என்றும் கூறுகிறார்கள். திறமை என்பதோ யோக்கியதாம்சம் என்பதோ எந்தக் குறிப்பிட்ட வகுப்பாருக்கும் பட்டயம் போட்டு, பாட்டன் வழி வழி வரும் உரிமையாக எந்தக் காலத்திலும் எந்த லோகத்திலும் இருந்ததே கிடையாது. தனக்குத்தான் திறமை உண்டென்று பிராமணர் பேசுவது அகம்பாவமான பேச்சு.



திறமை பிராமணர்களுக்குத்தான் உண்டு என்று பிதற்றுவது அசல் பித்தலாட்டம். மேலும் இம்மாதிரி பேசுவது இதர வகுப்பாரை அவமதிப்பதாகும். மைனாரிட்டியாக இருக்கும் ஒரு சமுகத்தார் இம்மாதிரியான பேச்சைப் பேசுவது ரொம்ப ஆபத்தாகும்.

தங்களின் அப்பட்டமான வகுப்புவாதத்தை மறைப்பதற்காக இந்த வீரர்கள் சர்வ தேசியமென்றும், பரந்த நோக்கமென்றும் பேசுகிறார்கள். சர்வ தேசியம் என்பதும், பரந்த நோக்கம் என்பதும், திரைமறைவில் தன் இனத்தாருக்கு உழைப்பது என்ற அர்த்தத்தில் இல்லை. தன் ஜாதியான்தான் முன்னேறவேண்டும்—தன் பந்துமித்ரர்தான் உயர்ந்த பதவிகள் வகிக்கவேண்டும் என்று நினைப்பது மகா பட்டரகமான வகுப்புவாதம். இந்த வடிகட்டின வகுப்புவாதத்துக்குச் சர்வ தேசியம் என்று பெயர் கொடுத்தால் நாக்கு அழுகிவிடும். இந்த மாபாதக வேலையைத்தான் சட்டசபைக்குள்ளும் வெளியேயும், மேடைகளிலும், பத்திரிகைகளிலும் இவர்கள் செய்கிறார்கள். எல்லோரும் ஓர் குலம் என்று நினைக்கிறவர்களைக் கூட இவர்கள்தான் ஆத்திரமூட்டி அனாவசியமான பிரசனைகளைக் கிளறிவிடுகிறார்கள்.

கிளர்ச்சி செய்யும் பீமராவும் சூரியநாராயண ராவும், "இந்துவும்" வரதாச்சாரி கம்பெனியும், விவேகானந்தா மடத்து அதிபதிகளும் வெங்கடராம சாஸ்திரிகளும் என்ன சொல்லுகிறார்கள்?

1. அதிகமான பள்ளிக்கூடங்கள் கட்டும்படி கேட்கவில்லை.

2. இருக்கிற பள்ளிக்கூடங்களில் இருக்கும் வகுப்புவாரி முறையை ஒழிக்கச் சொல்லுகிறார்கள்.

3. இதன்படி செய்தால் பிராமணப் பிள்ளைகள் நீங்கலாக இதர பிள்ளைகள் தெருவில் நிற்கவேண்டும்.

4. இப்படி நிற்கவைப்பது தான் தேசியம் என்றாலோ, பரந்த மனப்பான்மை என்றாலோ, இந்தச் சர்வ தேசியமும்

பரந்த மனப்பான்மையும் வேண்டவே வேண்டாமென்று தானே கூறத் தோன்றும்.

5. 3சத விகிதப் பேரில் இருக்கும் மக்களுக்காக 97 சத விகிதத்தில் இருக்கும் மக்கள் தெருவில் நிற்கவேண்டுமென்பது வகுப்புவாதமல்ல என்றால், 97 சத விகிதப் பேருக்கும் சற்றுச் சலுகைக் காட்டவே வகுப்புவாரி பிரதிநிதித்வம் என்று கூறுவது எவ்வளவு பெரிய வகுப்புவாதமற்ற பேச்சாகும்.

கல்வி ரேஷன் முறையை எடுத்துவிட்டால் ஆதிக்கம் கொண்ட கூட்டத்தாரின் வெறியாட்டத்தைக் காணலாம். இதற்கு உதாரணம் பார்க்க வெகுதூரம் போக வேண்டியதில்லை. சென்னையிலுள்ள விவேகானந்தா காலேஜையும், வெளியூர்களில் உள்ள பிராமணர் நடத்தும் சில பள்ளிக்கூடங்களையும் பார்த்தாலேயே போதுமானதாகும். வகுப்புவாதம் ஒழியவேண்டும் என்று கதறும் இந்த வீரர்கள் விவேகானந்தா கல்லூரியில் காணப்படும் நிலைமையைக் கண்டு ஏன் "ஐஸ் வாட்டர்" சாப்பிட்டவர்கள் மாதிரி இருக்கிறார்கள். அதே சமயத்தில் பிரதிநிதித்துவ முறைப்படி இடம் இல்லை என்று சொன்ன கல்லூரிகள் மீது, நக்கீரனைப் பார்த்த சிவபெருமானைப் போலப் பார்க்கிறார்கள். இந்த ஓரவஞ்சகத்திற்கு என்ன என்று சொல்லுவது?"

இவை, "காண்டீபம்" எனும் காங்கிரஸ் ஏடு, தீட்டுவது-3-12-48-ல். அமைச்சர்களின் கருத்து மட்டுமல்ல, அமைச்சர்களை ஆக்குவிக்கும் ஆற்றல் கொண்ட ஏடுகள் பலவும், ஜாதி முறையை ஒழித்தாக வேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளன. இந்நிலை வளரும்! நிச்சயமாக வளரும்!!

வகுப்பு நீதியைக்காண, வகுப்புவாரி முறை தேவை, என்று திராவிடர் கழகம் கூறினால், கழகம், கடவுட் கொள்கைக்கு விரோதமானது என்று கலகமூட்டியும், காங்கிரசை எதிர்ப்பது என்று சொல்லியும், தள்ளிவிட எண்ணுவர், அவசர வாதிகள். காண்டீபம், சொல்லும்போது! காண்டீபம் அர்ஜுனனுக்கு ஆண்டவன் தந்த ஆயுதம், புராணத்தின்படி! பத்திரிகை உலகச் செய்தியின்படி, தேசியத் தினசரியின்வார ஆயுதம் காண்டீபம்! மூலபலம் முறிகிறது என்பதற்கு, வேறென்ன எடுத்துக்காட்டு வேண்டும்!



அதுபோலவே, பிரச்னையின் மற்றோர் கூறான— முக்கிய கூறான ஜாதித் திட்டத்தைப் பற்றி, நாம் கூறுவதைத்தான், பழி சுமத்தித் தள்ளிவிடலாம் என்று எண்ணினாலும், பகத்சிங் சொன்னதைத் துச்சமென்று தள்ளிவிட, எந்தத் தேசியத் தோழர், துணிவார்! தூக்குமேடை ஏறிய துடிப்புள்ள வீரன்,

"மமதையும் பேராசையும் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் கொண்டு குதிக்கும் பிராமணர்களால், வேண்டுமென்றே நிர்மூடத்தனத்தில் ஆழ்த்தி அமுக்கப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் தண்டனைக்குப் பொறுப்பாளி யார்? உங்களுடைய பரிசுத்த ஞான நூற்களாகிய வேதங்களிலிருந்து சில வாக்கியங்களை அவர்கள் கேட்டாலும் அவர்களுடைய காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும் என்று தண்டனை விதித்ததற்கு அபராதம் செலுத்தவேண்டியவர்கள் யார்?"

என்று சொன்னான்! வீரனின் குரலையுமா, வீணரின் கலகப் பேச்சு வீழ்த்திவிடும்!!

தூக்குமேடை ஏறத் துணிந்த விடுதலைவீரன் மட்டுமே தான், இவ்விதம், உள்ளம் கொதித்துக் கூறினார் என்று கருதவேண்டாம், துறவியாகி, மதத்தின் மாசு போக்கி, தூய்மையும் வாய்மையும் துரைத்தனம் செய்யவேண்டுமென்று பாடுபட்ட பண்பாளர், விவேகானந்தர், உயர் ஜாதி என்று பன்னெடுங்காலமாகப் பட்டயம் பெற்றுக் கொட்டமடித்து வந்தவர்களால், நாட்டுக்கு நேரிட்ட நாசத்தை நன்றாக விளக்கிக் கண்டித்திருக்கிறார்.

சுயநலச் சிறு கூட்டத்தின் செயல்—என்று பட்டவர்த்தனமாகவே எடுத்துக்காட்டி 'பிரசண்ட விகடன்' கண்டித்துஎழுதுகிறது.

"ஆக்ஸ்போர்டு அகராதியில் சுதேசி, என்ற சொல்லுக்கு ஐரோப்பியரல்லாதவர் அல்லது நாகரிகமில்லாத இனம் என்று சொல்லப்பட்டருக்கிறது. இது ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளின்

இறுமாப்பை, ஆளும் வர்க்கம் என்ற அகம்பாவத்தை வெளிப்படுத்துவதற்கு உதவும் முறையில் அமைந்திருக்கின்றது. இதையும் ஒருபடி மிஞ்சக்கூடிய முறையில் நம் நாட்டில், ஒரு சொல்லுக்கு விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நாகரிகச் சிறப்பு வாய்ந்த இந்நாட்டுப் பெருங்குடி மக்களை—திராவிடர்களை—குமாரில்ல பட்டர் என்ற ஆரியர், மிலேச்சர், காட்டுமிராண்டிகள் என்று குறித்துள்ளார். மனுஸ்மிருதி என்ற நூலிலும் கேவலமான முறையில் குறிக்கப்பட்டிருக்கிறது. காட்டுமிராண்டிகளாய், இருப்பிடம் இல்லாமல் அலைந்த சுயநலச் சிறு கூட்டமான ஆரியர்களுக்கு, தங்க இடமும், வாழ வசதியும் செய்துகொடுத்த குற்றத்திற்காக, இந்நாட்டுப் பெருங்குடி மக்களை இழிவு படுத்தும் முறையில் ஆரியச் சிறு கூட்டம் செய்துவந்த சதிச்செயலை—சூழ்ச்சியை—நய வஞ்சகத்தை இந்நாட்டு மக்கள் இப்பொழுது அறிந்து கொண்டு விட்டார்கள். ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையில் தகாத பெயர்களைக் குறிப்பிட்டு, இந்நாட்டுப் பெருங்குடி மக்களை இழிவு படுத்தி வந்திருக்கிறார்கள். இம்மாதிரி செய்வது இனியும் நடக்காது என்பதைத் தெரிந்துகொண்டு விட்டார்கள். அதனால்தான் இப்பொழுது தங்கள் வஞ்சகச் செயலைப் புதிய உருவில் காட்டத் தலைப்பட்டிருக்கிறார்கள். இப்படி நடக்கும்போது, தங்களைப் பெரிய ஜனநாயக வாதிகளைப் போல் நினைத்துக்கொண்டு செயலாற்ற முன்வந்திருக்கிறார்கள். இவற்றைச் சிறிது கவனிப்போம்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமுறை சமநீதியை முக்கியமாகக் கொண்டு ஏற்பட்டதாகும். இது முன்பு சென்னை மாகாண அமைச்சராய் இருந்த திரு. முத்தையா முதலியார் கொண்டு வந்த சட்டமாகும். இச் சட்டம் நீதிக்கும் ஜனநாயகக் கொள்கைக்கும் மதிப்புக் கொடுக்கும் முறையில் ஏற்பட்டதாகும். அதாவது 100-97 சத விகிதம் உள்ள பெருங்குடி மக்களுக்கு, அவர்கள் விகிதாச்சாரப்படியும், 100-க்கு 3 பேராய் உள்ளவர்களுக்கு அவர்கள் விகிதாச்சாரப்படியும் உத்யோகங்களை வழங்கும் தன்மை கொண்ட ஓர் ஏற்பாடாகும். இந்த ஏற்பாடு தப்பு என்று 100க்கு 3 பேராய் உள்ள கூட்டம் எக்காரணத்தைக் கொண்டும் சொல்ல முடியாது. ஏனென்றால் தாங்கள் இந்நாட்டுப் பெருங்குடி மக்



களில் இருந்து வேறுபட்டவர்களென்றும், தங்கள் மொழி ஆரிய மொழி என்றும் சொல்லிவந்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் இந்நாட்டுப் பெருங்குடி மக்களுக்கு, குமாரில்ல பட்டராலும், மனுஸ்மிருதி போன்ற நூல்களாலும் கொடுத்துவந்த இழி சொல்லை—நியாயத்துக்கு விரோதமான கூற்றை, மறுத்துக் கூறியதுமில்லை. மனுஸ்மிருதியை முன்மாதிரியாகக் கொண்டு ஒரு குலத்துக்கு ஒரு நீதி வழங்கும் இந்துமதச் சட்டத்தைக் கண்டிக்கவுமில்லை. கண்டிக்காததும் தவிர, அதனால் தங்களுக்குக் கிடைத்த அனுகூலமான உரிமைகளை மறுக்கவுமில்லை. இந்நிலையில், மைனாரிட்டிகளாய் உள்ளவர்கள், இருபதாம் நூற்றாண்டின் நியாயப்படி கிடைக்கவேண்டிய சில உரிமைகளைக் கொண்டு திருப்தியடைவது தான் சிறந்ததாகும். தினை விதைத்தவன் தினை அறுக்கவேண்டியது தான் நியாயம்.

நிற்க, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவு வருவதற்கு முன்பு, இச்சிறு கூட்டத்தார் இந்நாட்டில் எல்லா உத்தியோகங்களையும் எகபோகமாக அனுபவித்து வந்தார்கள். அதிகாரத்திலிருக்கும் ஓர் வகுப்புத்தான் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதை நாளடைவில், இந்நாட்டுப் பெருங்குடி மக்கள் உணரலானார்கள். இதன் விளைவாக, படித்த பெருங்குடி மக்களின் சிந்தனையிலே புரட்சி தோன்றியது. அப் புரட்சியின் விளைவாய் அதிகாரத்துக்கு வந்தவர்கள் தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவு போட்டவர்கள் ஆவர். இவ்வுத்தரவு வராதிருந்தால் இந்நாட்டுப் பெருங்குடி மக்கள், இப்பொழுது பல துறைகளிலும் பெற்றிருக்கும் தகுதியைப் பெற்றிருக்க முடியாது.

100-க்கு 3 பேராய் உள்ளவர்கள் பெறவேண்டிய உத்தியோகம் மூன்றுதான். ஆனால் அவர்களுக்கு 100-க்கு 14 உத்தியோகங்கள் கொடுக்கப்படுகின்றன. இது கூடத்தப்பு என்பது நம் கருத்தாகும். ஏனென்றால், இவ்வகுப்பார் இன்றுவரை தங்கள் வகுப்புவாத உணர்ச்சியைக் கைவிடாமல், வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் காரியங்கள் செய்து வருவதை நாடு அறியும்.

இந்நாட்டு அரசாங்கம் 100-க்கு 97 சதவிகிதம் உள்ள இந்நாட்டுப் பெருங்குடி மக்களின் வரிப் பணத்திலும், உழைப்பிலும்

நடைபெறுவது கண்கூடு. இந்நிலையில் 100-97 பேராய் உள்ள மக்களின் நன்மையை மனத்தில் கொண்டுதான் காரியங்கள் செய்ய வேண்டும்; இதுதான் ஜனநாயகமும் கூட. இந்த ஜனநாயகத்தை, வகுப்புவாதம் பேசும் சிறு கூட்டத்தார் ஏற்றுக்கொண்டுமிருக்கிறார்கள். இப்படியெல்லாம் இருந்தும் கூட, இப்பொழுதுள்ள மந்திரி சபை 11 ஸ்தானங்களை உத்தியோகத்தில் அதிகமாக விட்டுக்கொடுத்திருக்கின்றது. சில இலாக்காக்களில் அவர்கள் 80, 90 சத விகிதம் கூட இருந்து வருகிறார்கள்.

அத்துடன் சென்னை நகரத்திலுள்ள அரசாங்கக் கல்லூரிகளில் அச்சிறு கூட்டத்தவர்களுக்கு மொத்தம் 840 இடங்களும், இந்நாட்டுப் பெருங்குடி மக்களுக்கு மொத்தம் 709 இடங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இப்படியெல்லாம் இந்நாட்டு அரசாங்கம் விட்டுக் கொடுத்துங்கூட, எங்களுக்குக் கல்லூரியில் இடமில்லையே என்று பொய்க் கூச்சல் எழுப்ப அச்சமூகம் தவறவில்லை. இல்லாத ஒன்றை, இருப்பதாகச் சொல்லி அழுவதும், திரித்துக் கூறுவதும், சதிச்செயல் புரிவதும் அவர்கள் பாரம்பரையாகக் கையாண்டு வரும் காரியமாகும்.

மந்திரிகளின் விட்டுக்கொடுக்கும் தன்மையை, மேலும் தங்களுக்குச் சாதகமாய் உபயோகப்படுத்திக் கொள்ளவேதான் அவர்கள் இப்படிச் செய்து வருகிறார்கள்.

ஸ்ரீமதி ருக்மணி இலட்சுமிபதியின் இப்பொய்க் கூற்றை மண்டையிலடிக்கும்படி, தன்மான உணர்ச்சியோடு, நிதி அமைச்சர் ஸ்ரீ கோபால் ரெட்டி, புள்ளி விவரங்கள் கொடுத்து, அவர்களின் ஏமாற்று நாடகத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். மேலும் அவர் இந்நாட்டில் வகுப்புவாதத்தை ஏற்படுத்தியவர்கள் பிராமணர்கள்தான் என்று கூறியிருப்பது முற்றும் உண்மையாகும். இந்த உண்மையை ஒப்புக்கொண்டு, காலப் போக்கிற்கு ஏற்ப தங்கள் தவறைத் திருத்திக்கொண்டால் அவர்களுக்கு நல்லது என்று நாம் யோசனை கூறுகிறோம்.

வகுப்புவாத உத்தரவு, இந்நாட்டு மக்களின், கீழ்ப்படியிலுள்ள மக்களும் மேலே மேலே முன்னேறி, ஆதிக்கம் பெறும்வரை



யில் இருந்து தீரவேண்டும் என்று நாம் கருதுகிறோம். இந்த உத்தரவு, நியாயத்தை—சமநீதியைக் கொண்டதாகும். இவ்வுத்தரவுக்குக் கேடு செய்கின்றவர்கள் நீதிக்கு, ஜனநாயகத்துக்குக் கேடு செய்கின்றவர்களாகவே கருதப்படுவார்கள். இதனை உணர்ந்து செயலாற்றும்படி ஆட்சியிலிருக்கும் மந்திரி சபையை நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்."

தெளிவும் தீரமும் செறிந்த இக்கண்டனம் மட்டுமா! பசும்பொன்முத்துராமலிங்கனாரின் "நேதாஜி" எனும்இதழ் தீட்டுவதைக் காணுங்கள்— ஆச்சரியப்படுவீர்கள்.

"சென்னையின் ஆதிக்கம் பிரகாசம்காருவிடமிருந்து, ஓமந்தூர் ரெட்டியார் கைக்கு மாறிய பிறகு,

உபயோககரமான ஒரு சில நல்ல காரியங்களும் நடந்தனவென்பது அநுபவம்!

ஆனால் அந்த ஒரு சில நன்மைகளில் பிரதான்யமானது, வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறை! இது ஜனசக்தியின் தீர்ப்பு.

வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையைச் சேன்னையில் அவசியமாக்கியது...............

அதைத் தீவிரமாய் எதிர்க்கிற—ஜாதியை பேதப்படுத்தி, அதன் உச்சிக்கு உடையவர்களாகத் தம்மைத் தாமே நியமித்துக் கொண்டு, தேசியத்திற்குப்பிரதிவாதம் செய்கிற—ஒரு கூட்டம் தான்!........இக்கூட்டம் யார் என்பதை நிதி மந்திரி கோபால் ரெட்டியாரும், மராமத்து மந்திரி பக்தவத்ஸலமும் பகிரங்கப் படுத்திவிட்டார்கள்.

உண்மையில் தேசியத்தை வளப்படுத்த வேண்டுமென்ற ஒன்றுக்காகவே தம்மை நியமித்துக் கொண்டதாயிருந்தால், ஹிண்டு—சுதேசமித்திரன்—தினமணி— கல்கி—போன்ற பத்திரிகைகள் முதலில் தமது சுவட்டிலிருந்து விலகவேண்டும். நிஜமாகவே இந்தத் தினுசுப் பத்திரிகைகள், மறைவாகக்கூட அல்ல பகிரங்கமாகவே ஜாதிப் போதையை ஏற்றி, நாட்டின் அந்தஸ்

தையே ஆபாசமாக்குகின்றன. மேற்கொண்டு, தமது முறைகேடான போக்கே சரியென்று சாதிப்பதற்காக, பெரிய பத்திரிகைகள் என்று தமக்கு டிரேட் மார்க் இட்டுக்கொண்டு, உண்மைக்குச் சுன்னமும் போடுகின்றன.

இவை ஜாதிப்பற்றோடு செய்த—செய்கிற சேஷ்டைகளின் விளைச்சல்தான், சென்னை சர்க்காரின் வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறை அமுல்!

தீர்க்கமாக யோசனை செய்து, சமுதாயத்தில் புரையோடிவிட்ட ஒரு வகுப்பின் கேடுகளை ஆதாரபூர்வமாய் அநுபவித்தறிந்த பிறகு, தவிர்க்க முடியாதது என்ற நிச்சயத்தில், நிதானமாகச் சட்டமாக்கிய சர்க்காரை, ஜஸ்டிஸ் கட்சி சர்க்கார்கூட ஒரு வகுப்புமீது இவ்வளவு துவேஷங் காட்டவில்லையென்று சீறுகிறார் ஒரு பெண் எம். எல். ஏ,......இதற்கு அனுகுணமாக மேலே சொன்ன பத்திரிகைகள் பத்தி பத்தியாகத் தலையங்கங்களை வளர்த்துத் தமது ஆத்திரத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றன.

இதற்கு முன் சென்னை சர்க்கார் ஒருதலைச் சார்பாகச் செய்த சட்டங்களைப் பற்றி, இவ்வளவு நீளமான கொதிப்புத் தலையங்கத்தை அந்தப் பத்திரிகைகள் தாங்கியதே இல்லை. தவிர இந்த வகுப்புவாரி முறையை எதிர்க்கிற விஷயத்தில் ஏனைய பத்திரிகைகள் அதிகமாக ஆத்திரப்படவும் இல்லை. ஆத்திரப்படுவதெல்லாம் அந்த நான்கைந்து பத்திரிகைகளே! அவ்வாறானால், மாகாணத் தலைமையின் சூத்திரக் கயிறு தம்மிடம் இருப்பதாகக் கருதியல்லவா அப்பத்திரிகைகள், நியாயவிரோதமாக, தேவையான சட்ட அநுஷ்டானத்தை ஆக்ஷேபிக்கின்றன? உண்மையில் வகுப்புவாரி முறை விஷயத்தில் இத்தனை ஒத்துழைப்பான எதிர்ப்பை தேசிய சர்க்கார்மீது காட்டுவதே அசல் வகுப்புவாதத் தாகு! இதைப் பொதுமக்கள் உணராமலில்லை.

இன்று சென்னை மாகாணத்தில் வாழுகிற ஒவ்வொருவருக்கும் நெஞ்சாரத் தெரியும்—குறிப்பிட்ட ஒரு வகுப்பினர் ஆண்டவன் படைப்பில் உயர்வு தாழ்வை உண்டாக்கி, உபயோகத்தில் செய்து காட்டுவது! இதற்குச்சாதாரணமாக எத்தனை ஆதாரங்களை வேண்டுமாயினும் எடுத்துக்காட்ட முடியும்.



ஏனைய நாடுகளை விட்டு விடுவோம். இந்தியாவின் ஏனைய மாகாணங்களில், சாப்பாடு ஹோட்டல் — காபி ஹோட்டல்— மிட்டாய்க் கடை— என்ற போர்டுகளைப் பார்க்கலாம். தவறினால் ஹிண்டு என்ற வார்த்தையை ஏகதேசமாய்க் காணலாம். ஆனால் பிராமணாள் என்ற வார்த்தை முன்னால் துருத்தியிருப்பதைப் பார்க்கவே முடியாது—சென்னை மாகாணத்தைத் தவிர! பிராமணாளின் வர்த்தக ஸ்தாபனங்களிலோ அல்லது போஜனசாலைகளிலோ பிராமணரல்லாதார், பிராமணரல்லாதார் என்ற காரணத்தைக் காட்டியே நிராகரிக்கப்படுகிறார்கள். ஆனால் பிராமணரல்லாதாரின் அடுப்படிவரை பிராமணர் நடமாட ஆக்ஷேபணையே இல்லை. ஏன்? "ஹிண்டு" காரியாலயத்தில் எத்தனை பிராமணரல்லாதார், உதவி ஆசிரியர்களாகவோ, முக்கிய பொறுப்பாளராகவோ அங்கீகாரமாகியுள்ளனர்? என்பதை அசல் தேசிய வேஷம் போடும் அந்தப் பத்திரிகை வெளியிடட்டும்.

பிராமணரல்லாதார் எந்த வகையில், பிராமணரை விட தோற்றத்திலோ, செயல் முறைகளிலோ, பாந்தவ்யங்களிலோ மட்டம்? என்பதற்குச் சரியான காரணத்தை இதுவரை எவருமே வெளியிட்டதில்லை. இதுபோன்ற எத்தனையோ தடுமாற்றங்கள் நித்தியமும் நடந்து நாட்டின் பரஸ்பரமே கெடுகிறது. இதைப் பிராமணர்களின் அந்தராத்மா ஒப்புக் கொள்ளாமல் ஒளிக்க முடியாது.

இங்கே பிராமணர்கள், படைப்பில் உயர்ந்தவர்கள் என்று பச்சையாகச் சொல்லுகிறார்கள் — பிராமணரல்லாதாரைக் குறிப்பிட்ட ஒரு அளவுவரைதான் அங்கீகரிக்கிறார்கள். இங்கு வகுப்புத் துவேஷம் வளருவதும், வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை சட்டமாவதும் ஆச்சரியமா, ஆக்ஷேபிக்கத்தான் முடியுமா?

சென்ற பிராமணர் முற்போக்கு மாநாட்டில், பல பிராமண தேசியத் தீவிரர்கள்கூடி என்னென்னமோ பேசி, சிருஷ்டியில் உயர்ந்தவர்கள், நாம் ஆண்டவனோடு உராய்ந்து பேசும் தகுதியுடையவர்கள் என்றெல்லாம் பேசி, புல்லேந்தும் கை, வாளையும் ஏந்தும் என்று சவால் விடுத்தனர். இது எவ்வளவு அபாயகரமான வார்த்தைகள் என்பதற்கு விளக்கமே வீண்!

இந்தத் தேசியப் புறம்பான பிரச்சாரத்தைப் பற்றி மேற்குறித்த தேசியப் பத்திரிகைகள் எவ்விதக் கண்டனத்தையும் செய்யவில்லை. பிராமணர்கள் செய்கிற எதற்கும் அது சட்ட விரோதமானதாக இருந்தால் கூட, இந்தப்பத்திரிகைகள் பிரதான்யங் கொடுத்து பிரசுரமளிக்கின்றன. இது நெஞ்சறிய நடந்த, நடக்கிற நிகழ்ச்சி. இந்தப் பத்திரிகைகள் தான் இப்பொழுது ஓமந்தூர் ரெட்டியாராட்சியை வகுப்புவாதியாக்குகின்றன. இவைகளைத் தேசியப் பிரதிவாதப் பத்திரிகைகள் என்று நாம் நிச்சயிப்பதில் தவறென்ன?

சிறுபான்மையோராயுள்ள பிராமண வகுப்பார் மீது தேசிய நோக்குள்ள எவருக்கும் துவேஷமே கிடையாது. ஆனால் துவேஷத்திற்குச் சந்தர்ப்பமளிப்பவர்கள் பிராமணர்களே என்பதை மந்திரியாரே மறைக்க முடியவில்லை. நாமும் இது நிஜம் என்பதை வருந்தியேதான் வெளியிட நேரிடுகிறது.

100-க்கு 3-க்கு மேல் தேறாத ஒரு ஜாதியார், அரசாங்கத்தின் இலாக்காக்களில் விகிதாச்சார மீட்டருக்கு மேல் மிக அதிகமாய் இடம் பெற்றுவிட்டனர். பெரும்பாலாயுள்ள ஜாதியார் எந்த வகையிலும் அங்கு இடம்பெறவில்லை. காரணம் திறமையின்மை என்று திறந்து கூறுகின்றன அப்பத்திரிகைகள். இவ்விதம் கூறுகிற அவைகளின் துணிச்சலைத் துண்டிக்கவேண்டிய வேலையை அரசாங்கம் இன்னும் தொடவில்லை. ஆனால் தொடப்போவதற்கு முதல் ஒத்திகைதான் வகுப்புவாரி முறை!

100-க்கு 3 பேருள்ள சமூக வளத்தை மேம்படுத்துவதற்காக, 100-க்கு 97 பேருள்ள ஒரு சமூகத்தாரின் வாழ்வை வறள வைப்பதற்குச் சம்மதிக்கிற இந்தப் பத்திரிகைகளுக்கு அரசாங்கம் முதலில் முத்திரை வைக்கவேண்டும்.

ஜாதீய பேதம் வேண்டும் என்று எவருமே விரும்பமாட்டார் —விரும்பக்கூடாது. அறிவில் தேறிவிட்டதாய் நினைத்துக் கொண்டு, தேசியத்தை வளமாக்குவதாய் நினைத்துகொண்டு, தேசியத்தை வளமாக்குவதாய் பிரசித்தப்படுத்திக் கொள்ளும் பத்திரிகைகள், ஜாதிபேதமே கூடாது என்ற வகையில், தீவிரமாக வேலை



செய்தால், சமுதாயத்தில் கிடந்த பிளவுகள், இதுவரை தழும்பு கூடத் தெரியாமல் மறைந்திருக்கும்.

வகுப்புவாரி முறை எடுபட வேண்டுமானால், முதலில் சிறுபான்மையோரின் சிருஷ்டிச் சிறப்பு என்ற மனோபாவம் சுத்தமாய் மாறித்தீரவேண்டும். இல்லையேல் ஜனநாயக அழகுக்குஜாதிபேதம் விகாரமானது—இந்தியர்கள் எல்லோரும் ஏக ஜாதிதான்—ஏற்றத்தாழ்வில்லை—உண்டு என்று உபயோகிப்பது சட்டவிரோதம்—என்று சர்க்கார் பிரகடனித்துவிட வேண்டும். இரண்டில் ஒன்று நடைமுறைக்கு வருகிறவரை, வகுப்புவாரிப் பிரதிநிதித்வமுறை, அதி அவசியம்!

ஆகவே தேசியத்தின் வர்ணத்தோடு, தேசியத்திற்குப் பிரதிவாதம் செய்யும் பத்திரிகைகள், ஆண்டவன் படைப்பில் அனைவரும் ஒன்று என்ற நியதியைப்பரப்ப, தம்மை நிவேதிக்க வேண்டும். அப்பொழுது தான் பிரச்னை சுலபமாய்த் தீரும்! அல்லாதவரை அதிருப்தி முதிரும். சமுதாயம் குடைசாயும். அத்தனைக்கும் காரணம் 100க்கு 3 பேராயுள்ள சமுகத்தார் தான் என்பது நிச்சயமாகி விடும், அந்த நிலையில்........?"

இவர்களைப்போல், பலரும் உண்டு, ஜாதீயத்தைக் கண்டித்தவர்கள்.

இவர்கள் செய்துவந்த, அறிவுப் புரட்சிக் காரியத்தையே நாம், தொடர்ந்து இன்று செய்து வருகிறோம். நாம், நிந்திக்கப் படுகிறோம் — கண்டிக்கப் படுகிறோம் — கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறோம். எனினும், குன்றாத ஊக்கத்துடன், நமது பணியினைத் தொடர்ந்து செய்கிறோம்—வேதனை நமக்குப் பரிசாகக் கிடைப்பினும், வெற்றி, வீழ்ச்சியுற்ற மக்களுக்குக் கிடைக்கப் போவது உறுதி என்ற நம்பிக்கையுடன்.

திராவிடர் கழகத்தின் மீது, காங்கிரசாட்சியின் பலத்தைத் திருப்பிவிட்டு, கழகத்தைக் கொடுமை செய்ய முடியும், ஆதிக்கக்காரால்; ஆனால் காங்கிரசிலுள்ள, நேர்மையாளர்களின் ஆதரவை

இனி ஜாதீயத்துக்கு — புரோகித ஆதிக்கத்துக்குப் பெற முடியாது. அந்த மனப்பால் குடிக்கவேண்டாம்!

நாள் தவறாமல், திராவிடர் கழகத்தின் மீது கலகமூட்டுவதன் மூலம், சிறைச்சாலைக்குள்ளே கொண்டுபோய்த் தள்ளிவிட முடியும், கழகத் தோழர்களை—ஆனால், ஜாதீயம் சவக்குழிக்கு இழுத்துச் செல்லப்படுகிறதே, அதனைத் தடுத்துவிட முடியாது! ஆம்! மூலபலம் முறிகிறது!!, கவனமிருக்கட்டும்!!

175319

பரிமளம் பதிப்பகம்
காஞ்சீபுரம்

Cover Printed at D. P. Works, Mannady, Madras.